அருட்பெருஞ்ஜோதி.

அருட்பிரகாசம்.

திங்கள் வெளியீடு.

எவ்வுயிரும் தன்னுயிரே போல எண்ணும் மாண்பு பெருமை தருமே.

மலர் 1. | பிரபவ ஆண்டு ஆடி மீ 1-ம் நாள். | இதழ் 3.

தலைப்பங்கம்.	...	...	65
தொடர்ந்த சமரசம்.	....	...	71
சமரச சன்மார்க்கம்.	...	...	74
ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்	...	....	78
ஜீவகாருண்ய ஒழுக்கம்.	...	...	80
அன்பு.	...	....	82
தமிழர்.	....	....	86
நூல்வெளியீடு.	....	....	88
சுப்பிரமணிய விளக்கம்.	....	....	89
மாணவர் பகுதி.	....	...	92
ஆயுளவேதம்.	....	...	93
கதம்பம்.	...	....	

வடலூர், இ. கோ. வரதராஜர்

பத்திராதிபர்.

பிறையாறு.

இரத்தினவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

வருடசந்தா கூ 2.] 1927. [ஆயுட் சந்தா கூ 25

ஷடாந்த சமரசசுத்த சன்மார்க்க சங்கநிலயம்.

அபிமானிகளுக்கு ஓர் அறிவிப்பு.

சென்ற வைகாசித்திங்கள் 15-ஆம் நாள் வடலூர் சத்திய தருமச் சாலையிற்கூடிய கூட்டத்தில் நிர்மானத்தின்படி அடியேன் ஆளித்திங்கள் பிறையாறு பாபு. நாராயணசாமியின்மே அவர்களுடைய காரைக்கால் வாணி விலாச முத்திராக்ஷசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தலாயிற்று. அதில் இல சனகரியங்களெல்லாம் குறைபாடுற்றதுபற்றி பிறையாறு ஓத்தினல்லா ரும் முந்நீராடசாலையைப் பதிப்பிடமாக்கிக்கொண்டு இம்மாதச்சஞ்சிகை வெளிப்போதுற நேர்ந்தது. பத்திரிகைநிர்வஹிப்பதற்குப் போதுமான பொ ருள் குறைவாக யிருப்பதால் அபிமானிகள் ஸ்ரீமத் திருவாடு பிரகாசம் பா ளர் பெருமாளிடத்தில் வைத்த அன்பின்பெருக்கத்தை இப்பத்திரிகையின் அபிவிருத்தியில்வைத்து நன்கொடையாகவும், சந்தாவாகவும் உதவிபுரியக் கேட்டுக்கொள்ளுகிறேன். "தாமின் புறுவ தலகின்புறக்கண்நோமுறுவர் கற்றறிந்தார்,, என.ஆன்றோர் வாக்கியத்திற்கினங்க நம்முடைய கொள்கை யைப் பரவச்செய்ய முன்வரவேண்டும். ஒவ்வொரு ஜீவதயாளுக்களும் நேயே சகர்களும் எவ்வளவோ பாபரப்பாக வேலைசெய்து வருவனவர்களை அன் பர்கள் அறிந்தவிஷயம். சுமார் 61-வருஷமாக உழைத்துப் பாடுபட்டவரும் நமது சங்கமானது திருவருணிறியைப் பரவச்செய்ய முன்வரவேண்டிய தற்காக தங்கள் கடமையைச்செய்யப் பின்னடையார்என்பது எமதுணி நமக்கு வள்ளற்பெருமானைப்போல இக்காலத்தில் நம்முலகிற்குப் பாடுபட்ட மகான்கள் வேறுயாவருளர். நம்முடைய சமயாச்சாரியர் கால்வரும் ஒருகு வாய் வந்தனரென்பதை யார் மறுக்கக்கூடும். நமதுசமயாதிதெறிவினக் கை வைத்த அரிதாரல்லர! அவருக்காக காம்என்றிசெலுத்துவ தெப்படி? அவருடைய திருவுருவப்படத்திற்கு நாற்றக்கண்ணாடிச் செலவு செய்து அலங்காரதாபதிப திருவுலாக்காட்சி பார்ப்பதுமாத்திரமா? அல்லவேயல்ல அவருடைய நோக்கமென்ன? அவருடைய உபதேசக்கள்யாவை? அவர்நட த்திக்காட்டினவையாவை? நாம்கடந்துசொன்ன வேண்டியவை எவ்வள வென்பதை ஆராய்ச்சிபண்ணவேண்டாமா? அதற்கான சங்கத்தைக் கூட் டவேண்டாமா? அவ்விஷயங்களைப் பத்திரிகை மூலமாக வெளிப்படுத்த வேண்டாமா? இப்படிக்கு நாம் செய்யவேண்டிய வேலைகள் அனந்தமுண் எத்தவேலையைச் செய்தோம்? செய்கின்றோம்? ஒன்றுமில்லையே நம்மையும்,,அபி மானிகளென்று சொல்லிக்கொள்ளுகிறோமே. சொல்லாமலிருக்கவும் மன வாவில்லையே! ஆகையால்நாம் முன்னேற்றமடையவேண்டிய மார்க்கத்திலு இப்பத்திரிகையின் அபிவிருத்தியும் ஊக்கம்செலுத்துதல் அறிவாளிகள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாக் கடமைகளின் பாற்பட்டதென்பாம்.

ப—ர்

உள்ளுறை.

தலையங்கம். பத்திராதிபர்.

ஷடாநந்த சமரசம், சீகாழித் தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமான் ப. அ. முத்துத்தாண்டவராய
பிள்ளை அவர்கள்.

சமரச சன்மார்க்கம், நவசக்தி ஆசிரியர், ஸ்ரீமான்,
,, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்
அவர்கள்.

ஸ்ரீமத், இராமலிங்க சுவாமிகள், தில்லையாளி.
,, த. வேதியப்பிள்ளை அவர்கள்.

ஜீவகாருணிய ஒழுக்கம், ஸ்ரீமத், திருவருட்பிரகாச
வள்ளலார்.

அன்பு, பத்திராதிபர்.

தமிழர், ஸ்ரீமான், N. தம்பியப்ப செட்டியார் அவர்கள்,

நூல் வெளியீடு, பத்திராதிபர்.

சுப்பிரமணிய விளக்கம், வடலூர் மேட்டுக்குப்பம்
சித்திவளாகமாலிகை ஸ்ரீமத், சக்கரவர்த்தி சுவாமிகள்.

மாணவர் பகுதி, பிறையாறு உபாத்தியாயர்.
ப. அ. கிருஷ்ணசாமிப் பிள்ளை அவர்கள்.

ஆயுள்வேதகம். தில்லையாளி, வைத்தியபதி
ஸ்ரீமான், சி. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.

கதம்பம், உத்தரஞான சித்திபுரத்து சிற்சபை அமைப்பு,
சுவாமிகளின் அற்புதம், கிளைச்சங்கம் முதலியன.

ப்ரமரிவருகை.

வள்ளலார் பத்திரிகை.

சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லாஉலகத்தும் விளங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளுமில்லை. தடையற்ற பெருகெறிவழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். அதன்மேன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமயபேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசார பேதங்களும்போய் சுத்தசன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29-வருஷத்துக்குமேல். இப்போது வருகிற நமதுகடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட ஏற்பட்டுள்ள கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத்தேவர்களும், எல்லாக் கடவுளரும் எல்லாத்தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக்குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப்பெரும்பதி. இதுஉண்மையாயின் அந்தப்பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்தவர்களும் பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள் அஞ்சவேண்டாம்.

பிரசோற்பத்திவரு
சித்திரைமீ 1உ
சித்தி வளாகம்

இங்ஙனம்,
சி. இராமலிங்கம்.

ஓம்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

அருட்பிரகாசம்.

உத்தரஞான சிதம்பரம்,

ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க

நிலையத்தினின்றும்

வெளிவருவது.

மலர் 1	சாலே சகாப்தம் 61 பிரபவ ஆண்டு ஆடித்திங்கள் 11-நாள் 1927 ஸ்ரீ சூலை 26உ	இதழ் 3

உத்தரஞான சிதம்பர மான்மியம்.

அருளோங்குகின்ற கருட்பெருஞ்ஜோதி யடைந்த தென்றன்
மருளோங்குமற் றவிர்த்தது கல்ல வரமளித்தே
பொருளோங்க நானருட் பூமியில்வாழப் புரிந்தென்றுந்
தெருளோங்க வோங்குவ துத்தரஞான சிதம்பரமே.

அருட்பெருஞ்ஜோதி மான்மியம்.

அருட்பெருஞ்ஜோதி யென்னுருயிரிற் கலந்தாடுகின்ற
அருட்பெருஞ்ஜோதி யென்னன்பிற் கலந்தறிவாய் விளங்கும்
அருட்பெருஞ்ஜோதித் தெள்ளாரமுதாகி யுள்ளணைந்து நிற்கும்
அருட்பெருஞ்ஜோதி நின்னுசையொன்றே யென்னுள்ளார்
[ன்றமே.

உலகப்பேறு.

இன்பா லுலகங்கள் யாவும் விளங்கின
அன்பா லிறந்தவர் அன்பற்றுத் தோன்றினர்
அன்பா லடியவ ராடினர் பாடினர்
என்பா லருட்பெருஞ் ஜோதியா செய்தவே.

அருட்பிரகாசம்.

எல்லாம் வல்ல இறையவனருளால், உத்தரஞான சிதம்பர மென்னும் வடலூரில் சற்றேறக்குறைய 25-வருஷங்களாக எனக்கு அபிமானமுண்டு. திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம், ஸ்ரீமத், ஞானலிங்க சுவாமிகளே எனக்கு பரமாச்சாரியார். அவராற் குறிக்கப்பட்ட அருட் பெருஞ்ஜோதி ஆண்டவனே எனது உண்மைக் கடவுள். அவர்களாற் ரூப னஞ் செய்த ஷடாந்த சமாச சுத்த சன்மார்க்க சங்கலியமே, எனக் குரித்தாகிய இடம். ஷி சங்கலியத்தாரே எனது உறவினர். ஸ்ரீமத் வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாவே எனது சத்திய வே தம். அந்த வேதத்திலே சொல்லிய திருவாக்குகளின் படி என் மனசாட் சிக்கு ஒப்ப நான் நடந்து கொண்டு வருகிறேன். என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றும் அவரிடத்திலேயே ஒப்புவித்துவிட்டேன். எனக் கென எந்தவிதமான சுதந்தாமுமில்லை. நான் அவருடைய அடிமை. அவர் காட்டக் காண்கின்றேன். மற்றெல்லா மிப்படியே. நான் இரண்டு பத்தி ரிகைகளாகவே என் பெயரைப் பத்திராதிபன் என்று எழுதிக் கொண் டதைப்பற்றி நடுங்குகின்றேன். மனம்நடுங்குகின்றது. வாயுங்குளருகின்றது. கையும் எழுதக் கூசுகின்றது. நான் இத்தப் பத்திரிகைக்குத் தலைமை வகிக் கலாவது ஆளுகைபண்ணலாவது சீர்திருத்தம் பண்ணலாவது அருகனல்ல. மற்றும் என்போன்றயாரும் அருகரல்ல. அருட்பிரகாசமென்ற பெயரை வகித்த வள்ளற் பெருமானே தகுதியுடையவர். ஆகையால் இத்தப் பத்தி ரிகை முதற் கொண்டு தோன்றுதுணையாய் நின்றதவும் திருவருட் பிர காச வள்ளலாரே பத்திரிகாசிரியர் பத்திரிகைத் தலைவர் பத்திரிகை கௌிப்படுத்துகிறவர். எந்த எந்த காலத்திலே எவரெவர் மூலமாகத் தன் னுடைய கடமைகளை முடித்துக்கொள்ளுவாரோ, அதுனைக்குத்தெரியாது. இந்த நிமிஷம் வரையில் அவர் உணர்த்த உணர்கின்றேன். இதற்கு முன் னுமப்படியே. இதற்குப் பின்னுமப்படியே. நான் அடிமை யென்று முன்னே சொன்னதற்கிணங்க என்னுலியன்ற தொண்டைச் செய்கின்றேன். இத்தப் பத்திரிகை சம்பந்தமாக எந்தவிதமான கேள்விகளுக்கும் நான் உத்தர வாதியல்ல. இதில் வியாச தானஞ் செய்யும் ஆன்றோர்களுங் கவனிப் பார்களாக. அவர்களாலேற்படும் வியாசங்களுக்குள்ள கேள்விகளுக்கு அவர் களே பதிலளிப்பார்களாக.

அருட்பிரகாச மென்பது, அருளினது விளக்கமெனப் பொருள் பட்டு, அவ்வருள் விளக்கத்தைத் தரக்கூடிய அரிய வியாசங்களைத் தன்ன கத்தே கொண்ட பத்திரிகைக் காயிற்று. அருளென்பது இவ்விடத்தில் அகக்கண்ணைத் திருவியாகக்கொண்டு கடவுளின் இயற்கை யுண்மையை விளக்கும். பிரகாச மென்பது அஞ்ஞான சந்தேக விபரீத மாயை முத

அருட்பிரகாசம்

குற்றங்களின் இருளிலாமையைப் பயப்பது என்னும் பெர்ருள்தாம். ஆகவே அகக்கட் பொறியினற் காணப்படும் எழுவகை நிறத்த தாய்க் கடவுளின் அருட் சத்தியை வளாச்செய்து அவித்தையைத் துறந்து நித்தியானந்த வாழ்வைத்தந்து வீல பெறுவ தோர் சாதனமென்ற வாருயிற்று. உலகத்திலே ஆறறிவுடைய மக்கட் டேகத்தைப் பெற்றவர்களுக்குக் கடவுளாற் கொடுக்கப்பட்ட கண்கள் மூன்ருகும். அவற்றுள், அகக்கண்ணென்று, புறக்கண்களிரண்டு. புறக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி, முதலாய வற்றின் ஒளியினுல் விளக்க மடைகின்றன. அதுபோல, அகக்கண்ணுலாய உண்மை விளக்கத்திற்கு அருட்பிரகாசம் இன்றிமையாதது. சூரியன் முதலாய வற்றின் ஒளியினைப் பிறவிக் குருடன் அறியான் போன்று, எக்கும் நிறைந்த அருட் பிரகாசத்தினை அகக்கண்ணிருந்தும் அஞ்ஞானிகளறிகிறதில்லை. ஆதலால் அகக்கண் விளக்கம் பெறுவான் இச்சஞ்சிகை வெளியிடப் பட்டு வருகின்ற தென்பது அறிஞர்களுக்குத் தெற்றெனப் புலனும். அகக்கண்ணை அறிவின்பார்வை யென்றுங் கூறுவர். இதுபற்றியே

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலக மனைவையுஞ்
சகத்தே திருத்திச் சன்மார்க்கசங்கத் நடைவித்திட வவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடும் தென்றே யெனையீந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே"

எனவும்,

"கையற விலாதநெடுங் கனிபுரைப் பூட்டு,,
கண்டகள் கொண்டு தினந்தினம் நடநாடு
ஐயர் மிக வய்யும் வகை யப்பர் வினையாட்டு
ஆடுவ தென்றே மறைகள் பாடுவது பாடு.

எனவும் வருவணஸ்ரீமத் வள்ளலாரின் திருவாக்காதலின் அகக்கண்ணினுண்மையைக் காட்டுகின்றது. இக்கண் புருவ மத்தியிலே யுளதென்பர். அக்காரணம்பற்றிச் சந்தன மூதலிய திலத மணிவது பழக்கமாயிருந்து வருவதும் அறிஞர் பலரும் அறிந்த உண்மையே. இனி நம்முடைய இயற்கை யுண்மைக் கடவுளின் உண்மைத் தன்மையை உணர்த்தும் நூல் வேதாகமம், புராணம், இதிகாசமுதல் இந்திரஜால முடிவாகச் சொல்லுவார்கள். இவை உண்மைவேதாகமங்களென்றும், உலக வேதாகமங்களென்றும் இரண்டு வகைப்படும். மேலேகண்ட அருட்பிரகாசத்தினுதவியால் அகக்கண்ணினுலே உணர்ந்தறிவதுதான், உண்மைவேதாகமங்கள். சூரியன் முதலாகிய உதவிகளைக் கொண்டு புறக்கண்களினுலே அறிவதுதான் உலகவேதாகமங்கள். உண்மைக்கண்ணினுலே உண்மைப்பிரகாசத்தினுலே உண்மைவேதாகமங்களைக் கண்டு உண்மைக்கடவுளின் உண்மையின்பத்தைப் பெற்று எக்

அருட்பிரகாசம்.

காலத்தைத் தடைபடாமல் வாழ வேண்டுமென்பதே ஸ்ரீமத் வள்ளற் பெருமானின் பெருங்கருணையாம். அவ்வாறே பின்பற்றி அவ்வின்பத்தைப் பெற்றுக் கொள்ளப்போவதுடையோ மாதலின், உண்மை வேதாகமங்கள்தான் நமக்குரியவை. உலகவேதாகமங்களைச் சாலமென வறியவேண்டும். உலக வேதாகமங்களிலேயுள்ள சொல்லும் பொருளும் இலக்கியமும், பொய்யல்ல. அஃது அகக்கண்ணுடையார்க்கு மாத்திரம் உண்மையே. அருளின் பிரகாசத் திருநிலை கண்டுணர்வாயாகவென,

ஸ்ரீமத் வள்ளலார்:—

இயல்வேதாகமங்கள் புராணங்க ளிதிகாச மிவைமுதலா
விஞ்சா ஜாலங் கடையா வுரைப்பார்
மயலொரு நூல் மாத்திரந்தான் சாலமெனவறிந்தால்
மகனேநீ நூலனைத்துஞ் சாலமெனவறிக
செயலனைத்து மருளொளியாற் காண்கவென வெனக்கே
திருவுளம் பற்றிய ஞான தேசிக மாமணியே
யயலறியா வறிவுடையா ரெல்லாரும் போற்ற
வாடுகின்ற வரசே யென் னலக்கலணிந்தருளே
தோன்றிய வேதாக மத்தைச் சாலமென வுரைத்தேதஞ்
சொற் பொருளு மிலக்கியமுஞ் பொய்யெனக்கண்டறியே
லூன்றிய வேதாகமத்தி னுண்மை நினக்காரு
முலகறி வேதாகமத்தைப் பொய்யெனக் கண்டுணர்வாய்
ஆன்றதிரு வருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே
யாள்க வருளொளியா லென்றளித்த தனிச்சிவமே
யேன்றதிரு வருதெனக்கு மீந்த பெரும் பொருளே
யிலங்கு மடத்தாசே யென்னரசையு மணிந்தருளே.

எனக் கூறியிருக்கின்றார். திருவருட் பிரகாசத்தின் இயலும், உருவும், வடிவும், அடியும், முடியும், நடுவும், அறிவும், மனமும், குணமும், பதியும், பதமும், இடமும், தொழிலும், தீணையும், விருப்பும், பொருளும், ஒளியும், குலமும், இனமும், சுகமும், பெயரும், சிவமேயாகும்.
அன்றியும்,

அருளே நம்பியல் அருளே நம்முரு
அருளே நம்வடி வாமென்ற சிவமே
அருளே நம்மடி அருளே நம்முடி
அருளே நம்நடு வாமென்ற சிவமே
அருளே நம்மறி வருளே நம்மனம்

அருட்பிரகாசம்.

அருளே நங்ருண மாமென்ற சிவமே
அருளே நம்பதி அருளே நம்பதம்
அருளே நம்மிட மாமென்ற சிவமே
அருளே நந்தொழில் அருளே நந்துணை
அருளே நம்விருப் பாமென்ற சிவமே
அருளே நம்பொருள் அருளே நம்மொளி
அருளே நாமறிவா யென்ற சிவமே
அருளே நங்குலம் அருளே நம்மினம்
அருளே நாமறிவா யென்ற சிவமே
அருளே நஞ்சுகம் அருளே நம்பெயர்
அருளே நாமறிவா யென்ற சிவமே.

எனவும் அருட்பெருஞ்ஜோதி அகவல், கூறுகின்றது. இவ்வருளேயே தா யென்றுங் கூறுவர். அருட்பிரகாசமின்றிய நெறிகளும், அறிவுகளும், சுகங் களும், பேறுகளும், வல்லபங்களும், நிலைகளும், வடிவுகளும், உண்மைகளே யல்ல வென்பதை

அருணெறி யொன்றே தெருணெறி மற்றெலாம்
இருணெறி யெனவெனக் கியம்பிய சிவமே
அருள்பெறிற் றுரும்புமோ ரைந்தொழில் புரியும்
தெருளிது வெனவே செப்பிய சிவமே
அருளறி வொன்றே யறிவுமற் றெல்லா
மருளறி வென்றே வகுத்த மெய்ச்சிவமே
அருட்சுக மொன்றே யரும்பெறற் பெருஞ்சுக
மருட்சுகம் பிறவென வகுத்தமெய்ச் சிவமே
அருட்பே றதுவே யரும்பெறற் பெரும்பே
றிருட்பே றறக்குமென் றியம்பிய சிவமே
அருட்டனி வல்லப மதுவே யெலாஞ் செய்
பொருட்டனிச் சித்தெனப் புகன்ற மெய்ச் சிவமே
அருளறியார் தமையறியா ரெம்மையும்
பொருளறி யாரெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருணிலை யொன்றே அனைத்தும் பெறுநிலை
பொருணிலை காண்கெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருள் வடிவதுவே யழியாத் தனிவடி
வருள் பெற முயலுகென் றருளிய சிவமே
அருளலா தணுவு மசைந்திடா தத்தனு
லருணலம் பரவு சென் றுறைந்த மெய்ச்சிவமே

அருட்பிரகாசம்.

அருளுறி னெல்லா மாகு மீதுண்மை
அருளுற முயல்க வென்றருளிய சிவமே.

என நமதுண்மை வேதங்கோஷிக்கின்றது. அன்றியும், திருவருட்பிரகாசத்திலே, சகலஅண்டங்களும், புவனங்களும், கடல் புவி அனல் கால் அந்தரம் மற்றனைத்தும் தங்கியிருக்கின்றது. அதனதன் நிலை சூலயாதபடி அத்திருவருளிலேயே வைத்து இறைவனுந் திருவருளிலேயே யிருந்து அத்திருவருட் செங்கோலையே செலுத்தி, அத்திருவருளையே கொடுத்து அத்திருவருட் போகத்திலே மூழ்கச்செய்கின்றனென்றல், அத்திருட் பிரகாசத்தின் பெருமையை என்னென்பேன்.

அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமு மற்றை யகிலாண்டமு யாவும்
நிலைதலையா வண்ண மருள் வெளியினூடே
நிரை நிரையாய் நிறுத்தி யுயிர் நிகழும் வண்ணந்
தலை சூலயாத் தத்துவஞ்செய் திறோதை யென்னுந்
தனியாணை செலுத்தி யருட்டலத்தி லேற்று
மலைவற வீற்றிருந்தருளு மாசே ழத்தி
வழித்துணையே விழித்துணையுண் மணியாந்தேவே.

என மகாதேவமாலையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவின் எல்லாவற்றிற்கும் துணைச்சாதனமாகிய எல்லாம் வல்ல திருவருட் பிரகாசமொன்றே நாமடையும் பேருகலின் அதை யடையவேண்டிய சாகாக்கல்வியின் நிறத்தைப் பெரும்பாலும் அறிஞர்களால் வெளியிடப்படுவதாகிய இந்த அருட்பிரகாசப் பத்திரிகையின் பெருக்கத்திலும் அபிவிருத்தியிலும் அறிஞர்கள் தங்கள் அன்பைவளர்ப்பார்களாக. சுபம், சுபம்.

வேண்டுகோள்.

அருட்பிரகாசம் அவாவும் அன்பர்காள்!

"எல்லாம் செயல்கூடும்" என வுரைத்த வள்ளற் பெருந்தகையார் வாய்மொழிப்படி இனி நம் "அருட்பிரகாசம்" வியாசப்பெருக்காலும், வடிவழகாலும், மற்றும் பல்வகைச்சிறப்பாலும் சுக்கில பக்கச் சந்திரனை யொத்துப் பிரகாசிக்குங் காலஞ் சமீபித்திருத்தலின், இதனைக்கண்ணுறும் மெய்யன்பர்கள் பலரும் பொதுத்தொகையி லுழைக்க முன்வந்து பல்லிடங்களிலும் சந்தாதாரர்களை ஏற்படுத்தி இவ்வருட்பிரகாசத்தை எங்கும் பிரகாசிப்பிக்க வேண்டுகின்றனன். ப-ர்.

ஷடாந்த சமரசம்.

சிகாமணித் தமிழ்ப் பண்டிதர்
(ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்)

(42-வது பக்கத் தொடர்ச்சி)

சர்வேஸ்வரன் பஞ்சபூதத்திலே பிரவேசித்து அதிட்டிக்கப் பஞ்சீகிருத மாயிற்று. உண்ணிலே யென்ற பெயராய் முன் சொன்ன 25-மாம். இனித்தூல பூத அம்ஸ கூட்டங்களாவது பிருதிவிக்கு மயிர், தோல், எலும்பு நரம்பு, மாம்ஸம், ஆக 5. கூட மற்ற நாலு பூதத்துக்கும்-20 ஆக-25. இது புறநிலே யென்ற பெயராம். இனித்தூல மியற் பஞ்சவிங்சதியாவது எதிர் விஷயம்-10-ஞானேந்திரியன் கன்மேந்திரியம்-10-அந்தக்காணம்-4-உயிர-1 ஆக 25-இனித் (தூலபஞ்சவிங்சதியாவது) சுரோத்திராதி-வாக்காதிதானம் 10-அவத்தைதானம் 5 பிரதிவியின்கூறு மயிராதி-5-அப்புவின்கூறு சோரிமுதல்-5-ஆக-25-இனி (சூட்சம பஞ்சவிங்சதியாவது சத்தாதி-வசஞதி-10-அக்கினிசம்பந்தம், ஆகாரம், நித்திரை,பயம்,மைதுனம், மறப்பு, ஆக 5-வாயுவின்கூறான ஓடலிருத்தல் இடத்தல் நடத்தல் வலித்தல்ஆக 5. ஆகாயத்தின் கூறான காமக்குரோத லோப மோக மதம் ஆக 5. ஆக 25 இனிப் (பொதியில்(பஞ்சவிங்சதியாவது)ஞானேந்திரியங்கன் மேந்திரியம் 10 வாயு 10 காரணம் 4 உயிர் 1 ஆக 25.இனி (பூதவியற்பஞ்சவிங்சதியாவது) சுரோத்திராதி 5 வாக்காதி 5 விஷயம் 10 அந்தக்காணம் 4 பகுதி 1 ஆக 25. இப்படி ஏழுவிதப்பஞ்சவிங்சதி யென்றறிக. இனிச்சதுர்த்தோபகாணம் ஈஸ்வரதனுத்திரையம், அஃதாவது மகாதேவன் தன்னிச்சையாலே பஞ்ச மகாபூதத்தை இருபதுபங்காக்கி நிஸாம்ஸமே நிறுத்தி மீந்ததைக்கூட்டினர். அதிலே யொருபாகத்தை இருபத்தைந்து பாகமாக்கி இந்த இருபத்தைந்தும் ஈஸ்வராம்ஸமாம். பத்துத்திக்குஞ் சுரோத்திரம் வாய்வு தொக்கு சட்சு சூரியன் சிருவை, வருணன், ஆக்கிராணம், அஸ்வனி தேவதைகள் இலிரானிய கெற்பனிந்திரியம் வாக்கு, வன்னி, பாணி, சுரபதி, பாத மூபேந்திரன், குய்யம், பிரசாபதி, குதம், கிருதி, இது கன்மேந்திரியமாம். இது பிரமாண்டத்தில் வர்த்திக்கது. பிண்டத்திலுஞ் சரியாம். இனியந்தக் காரணம் விஷ்ணு, மனது-சந்திரன் புத்தி கமலாசனம்-சித்தம் நாராயணன் அகங்காரம் உருத்திரன் விஷயம் பத்தும் அண்டத்திலிருக்கையால் அதுவே விஷயம், இந்தவண்டத்தில் உயிர் குணதேவதை ஈஸ்வரலிங்கதேகம். இந்த சூக்ஷ்ம பூதமே ஈஸ்வரலிங்கதேக மென்று சுருதி பிரவித்தம். இந்த வண்டத்தில் உயிர் தேவதையும் பிண்டத்திலே ஜீவாசிகளுக்கு இருக்கின்ற தத்

அருட்பிரகாசம்.

தவம் உலகு அதிதேவதைகளாம். இனி ஈஸ்வரன், தூலதேகமாவது பஞ்சீகிருதபூதமாயிற்று. அதெப்படியென்றால் ஈஸ்வரன் பஞ்சபூதத்தையும் ஒவ்வொன்றாய்ப்பார்த்து ஆகாயத்திலே காரணம் 5-ம் உண்டாக்கி மற்றதம்ஸம் பாதியந்தகரணத்தை நிறுத்தும் மற்ற நான்கையும் நான்குபூதத்தில் கலப்பித்து வாய்வை ஐந்தாக்கி இதிற்பாதி நிறுத்தி மற்றநாலும் நான்குபூதத்தில் கலப்பித்து மற்ற மூன்றுபூதத்துக்கு மற்ற அம்ஸம் பாதி நிறுத்தி மற்ற நான்குபங்கையும் நாலு பூதத்தில் கலப்பித்து ஆகாயகாரணம்-5-வாயுவசனாதி-5-அக்கினி சுரோத்திராதி-5-அப்பு சத்தாதி-5-பிருதிவி வாக்காதி-5- ஆக 25-ம் தூலபஞ்சீகிருத தத்துவமாகும். இத்தப்பூதங்கள் ஒவ்வொன்றுக்கு மூன்று மூன்றுகுணகர்ம தர்மங்களுண்டென்றறிக. அதெப்படியென்றால் ஆகாயத்துக்கு நிர்மலமேதர்மம்-அவகாசமே-கர்மஞ்-சத்தமே குணம்-வாயுவிற்கு சத்தமேகுணம்-பரிசம்-2-சாஞ்சல்லிய மேதர்மம் உலாத்துகிறதேகர்மம்-அக்கினிக்கு சத்தாதிகுணம்கர்மம்.உஷ்ணமேதர்மம்பாகமே கர்மம் அப்புவுக்கு சத்தாதிகுணம்-4-நெகிழ்ச்சியே-தர்மம்-பதஞ்செய்வதே கர்மம் பிருதிவிக்குக்குணம்-5-கடினமேதர்மம்-தாராணதிகமே கர்மம் சத்தாதிகுணம்-5-இப்படியென்றறிக. காரணபூதத்தில் குணங்காரியரூபமாய் பிரவர்த்திக்கும். ஆகாசமுதல் ஒன்று ஒன்று பிறக்கையால் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருகுணம் அதிகமாயிற்று.இப்படியுண்டானசத்த-பரிச ரூப-ரச-கந்தம் 5-ம் சுரோத்திராதி ஐந்திலுமியப்படும். இந்தப் பஞ்சமகாபூதத்தை சர்வேஸ்வரன் பஞ்சீகிருதம் உண்டாயின பிறகு தூலதேகமான அண்டமெப்படி நிர்மித்தானென்னில். தன்னிச்சா மாத்திரத்தில் பஞ்சமகாபூதமும் விசித்திரமாக இரசதன்மாத்திரத்தில் கலந்து கற்பித்துச்செய்து நிர்மலதேகபாவமான பிரமாண்டவுற்பத்தியாயிற்று. அத்தேவதாமய விலக்ஷித்துக்கு பிரமாண்டமேஷிகம் அவயவயுதமாய்தூல தேகமாயிற்று. சததபாதாளமே உள்ளங்கால் முதலாய் தராதலம், இராதலம், மகாதலம், பாதலம், சுதலம் விதலம், அதலம் பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் இந்தப்பதினான்குலோகமும் விராட்புருஷனுக்கு அவயவங்களாம். இந்தப்பதினான்கு லோகத்துள்ள தெல்லாம் அவன்வயிற்றுக்குள்ளேயிருக்கிறது. இதெல்லாம் கூடினது பிரமாண்ட நிரிபுவனமாம் இது பிருதிவியாபரணம் இப்படியைந்தபூதமும் ஒன்றுகொன்று பதின்மடங்காவரணமாயிருக்கும். பின்பு மகதகங்காரம், மகதத்துவம் இப்படி ஏழாவரணமும் பரனுக்கு சத்தசதாதுவாம் இப்படியனந்தகோடி பிரமாண்டமும், மாயாதேவி கருப்பத்திலிருக்கும். பிரமாண்டங்கள் ஈஸ்வரனுக்குத்தூலசரீரம் இந்த தத்துவவிருட்டி சாக்கிரம். இதற்கு பிரமாஅபிமானி சிருட்டி கர்த்தாவினது பிரதமசரணம் அகார பீஜாட்சாமுதலிய சகலமும் கொப்பீகரித்திருக்கும்.இனி இரணியகெர்ப்பலிங்கதேகமாவது இச்சாசக்தி விஷ்ணுகர்த்தா அவஸ்தைசொர்பணம் உகாரபீஜம் சகலமும் கொப்பீகரிக்

ஷடாந்தசமரசம்.

ரும் இதுவிரண்டாமாத்திரை இது (ஈஸ்வரன்காரண தேகமாவது பிரகிரு தி மகாபிரளயமான சூழ்த்திஇது மூன்றும் கௌரிபதிக்கும் கைலாஸபதிக்கு தனுத்திரையமாயும் இதற்கு வாதாரபூதமாயுமிருக்கும் மகாரபீஜம் இதுபிர ணவத்தில் மூன்றுமாத்திரையாம் இதுசகலமும் ஓங்கார வீஸ்தாரணமா யிருக்குமென்றறிக. இனி விராட்டு இரணிய கர்ப்பமாயாவி இது மூன் றும் ஈஸ்வரன் தனுத்திரயமாம் உற்பத்திதிதிலயம் இது அவத்தாத்திரய மாம் பிரம-விஷ்ணு-ருத்திரன்-அபிமானிகளாம். அகாரம் மூன்று மாத்தி ரிகை குணமூன்று இதெல்லாம் மாயாவிஸ்தாரம் இனி காரணவுபாதிக்குச் சர்வேஸ்வரனே சகலமாய் வர்த்திக்கும் இது கேவலப்பிரமத்தில் இல்லை. இதுகாரணவுபாதியின் பிரிவென்றறிக. இனிச்சகலதத்துவர்த்தமும் முன் னே சொல்லுகிறோம். இதுஈஸ்வரன் தனுத்திரயமுடிந்ததென்றறிக. இது நாலாம் பிரகாணத்தில் சொன்னதென்றறிக. (பெத்தநிலையாவது) மூன் சொன்னபரமாத்மாவே பிரதிவிம்பித்த சீவாத்மாவுக்குக் காமகர்மஅவித்தை மூடப்பட்டு அஞ்ஞானத்தாலே தன் சொரூபத்தை மறந்து சுகதுக்கவியா கூலனுப் சென்ன மரணப்பட்டுச் சொர்க்க நரகங்களிலே திரிந்து திரும்ப வும் பிறந்து இறந்து நிரிவான் இவனைத்திரோபவசத்தியால் மறைப்பித்து ஞானசத்தியால் திருப்புகிறது. ஈஸ்வரன் எப்படி யென்றால் வெள்ளத்தில் அகப்பட்டவனை நீயக்கற்றவன் அவ்வெள்ளத்தில் குதித்துப் பிடித்துவந்து கரையில் விடவேண்டும். நித்திரைசெய்கின்றவனை விழித்திருப்பவன் எழுப் பவேண்டும். அவ்வித்தையாபந்தம் எப்போது மித்தையே யிதுசத்தியமா னால் விடுவிக்கக்கூடாது. ஈஸ்வரன் ஆதாரசிருட்டி வேண்டுமென்று நிச்ச யத்து பிரபஞ்சத்தின் அது சந்தானத்தாலே கிஞ்சித்மாத்திரம் விசித்திர சொரூபரானவுடனே அனந்தகோடி பத்தர்களுதபமாய் முகிளித அஸ்த மானர். அந்தசொரூபத்தில் கிஞ்சித்மாத்திரமானது தான் அஞ்ஞான லட்சணத்தில் சைதன்னியருக்கு அகங்காரபாவம் உதயமாயிற்று. அதெப் படியென்றால், ஒருதேகத்தில் அவயஅஸ்தபாதரோமதந்தமுகமும் பத்தி போலும் அஞ்ஞானசொரூபமாயாதேவியால் வெருவாம். ஒருபுத்திக்கு அனேகவிர்த்திதோன்றுவது போல அறிவில் மறைப்புக்கூடுகையாலே அந்த மாயாதேவி எத்தனை விதமானாலும் அத்தனைக்கும் ஈஸ்வரன் கூடிஅஞ்ஞா னலட்சண அவயவரூபராய்ப் பிரவேசித்தான். அதனால் சூரியன் கடோபா தியாலே அநேகாரம் போல ஒருசீவனே உபாதிபேதத்தால் அனந்தவிதசீவ ரானன். அந்தசீவனுக்கு எல்லாம் ஈஸ்வரனும் ஆவான். ஆனாலும் ஈஸ்வரன் நித்தியன். சீவன்காசம சீவகர்ம சுகதுக்கம் ஈஸ்வரனுக்குஇல்லை. ஆனால் சலத்தைவிடத்தாங்கமில்லை. சலந்தாங்க தர்மத்தைவிடும். இதுபோல் பர மாத்மா நினைவான பிரதிவிம்பத்திலே சீவதர்மம்வர்த்தித்து அது அஞ்ஞா னத்தில் பிரவேசிக்க விபரீத ஞானமுண்டாயிற்று. இதுபழுதைபாம்பானது

போல்என்றறிக. அதெப்படி? அஞ்ஞானம் பழுதைவிபரீதஞானம் சர்ப்பம் போலேயாம். இதல்லாமல் சூரியகிரணத்தாலே மேகமுண்டாகி அதுதானே சூரியனை மறைத்ததுபோல் ஆத்மாவினல் வந்த அஞ்ஞானம் ஆத்மாவை மறைக்கும். மறைத்தாலும் சூரியன்நடக்கிறகெதியையும் காழிகையையும் தடுக்கமாட்டாததுபோல் ஆத்மாவின் உண்மை ஞானத்தைத் தடுக்காது. அஞ்ஞானம் அவித்தையும் ஆவரணவிபரீத அஞ்ஞான விசேஷமாகிறதே சிவசங்கற்பகாரணம் (அவித்தையாவது) மூலபிரகிருதி அம்சம் அதற்குப்பிரகிருதியே தேகம். சேன்பரமபுருஷராம். ஆகையால் சேனையும் புருஷன் என்று சொல்லப்படும்.

சமரச சன்மார்க்கம்.

ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்.

நவசக்தி ஆசிரியர்

(மலர் 1. இதழ் 2. பக்கம் 52-ன் தொடர்ச்சி)

வாழ்வு.

வெறும் இயற்கை வாழ்வு என்றல் ஒழுங்குமுறை இல்லாத தா என்று சிலர் கடாவுவர். வாழ்வைபளித்த இயற்கை அன்னை ஒழுங்கு முறைகளை வகுக்காதொழிவளோ? இயற்கையில் உலகடை முறைக்கெனச் சில வாழ்வுமுறைகள் கோலப்பட்டிருக்கின்றன. வாழ்வுஎன்பது இருதிறத்தது. ஒன்று உடல் வாழ்வு, மற்றொன்று உயிர்வாழ்வு. உடல்வாழ்வு உலகியலோப்பற்றி நிற்பது, உயிர்வாழ்வு கடவுளோப்பற்றி நிற்பது. இவ்விரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. உயிர்வாழ்வுக்கென்றே உடல் வாழ்வு ஏற்பட்டது. உடல்வாழ்வின்றி உயிர்வாழ்வு கலம்பெறல் அரிது. எனவே கடவுள்நெறிக்கு உலகியல் இன்றியமையாதது.

உலகியல் கடைமுறைக்கு தான்கு துறைகளும், கடவுள் நெறிக்கென தான்கு துறைகளும், வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தான்கில் எல்லாத்துறைகளும் அடங்கலால் பிறவற்றை விரித்துக் கூறவேண்டுவதில்லை. உலகியல் செய்வினை கடைபெறற் பொருட்டு

சமரச சன்மார்க்கம்.

மக்கள் தொழிலாளரென்றும், வாணிபரென்றும், அரசினர் என்றும், பார்ப்பனரென்றும், பிரிந்து கடனுற்றி வாலாயினர். இப் பிரிவு இயற்கை யின்பாற்பட்டது. மக்கள் அனைவரும் ஒரேகட னுற்றப்புகுவரேல் உலகம் நடைபெறுது. ஆதலால் இப் பிரிவு இன்றியமையாதது. இம்முறைவழி உலகம் இயங்கிவருகின்றது. எங்குத் தொழிலாளர் இல்லை? எங்கு வாணிபரில்லை? எங்கு அரசினரில்லை? எங்கு ஆசிரியரென்னும் பார்ப்பாரில்லை? அவ்வத்தொழி லாளர் யாண்டும் உளர். இஃது உலகியல் முறை.

உயிர் வாழ்விற்கும் நான்கு துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை; உலகு உயிர் கடவுள் முதலியவற்றை அறிவுறுத்தும் கல்வி ஒன்று; கற்றதை நிகழ்ச்சியில் கூட்டவல்ல இல்வாழ்வு மற்றொன்று; அவ்வில்வாழ்வால் பெறும் அன்பால் மனைவியுடன் உயிர்களுக் குதவும் அறம் வளர்ப்பது இன்னொன்று; அதன்வழி அழுக்காறு அவா, வெகுளி முதலிய மாசுகளினின்றும் விடுதலையடைந்து, எவ்வுயிரிலும் சத்தெனுஞ் செம்பொருள் பொலிவதுகண்டு, உயிர் கட்குச் செந்தண்மை பூண்டொழுகும் முடிந்தநிலை எய்துவது வேறொன்று. இந்நான்கும் மக்கட்கு வேண்டற்பாலன. இவையும் உலகில் இயங்கி வருகின்றன. எந்நாட்டில் மாணக்கர்களில்லை. எந்நாட்டில் இல்வாழ்வோரில்லை? எந்நாட்டில் அறவோரில்லை? எந்நாட்டில் துறவோரில்லை?

இவ்விரு முறைகளின்வழி வாழ்வு நடாத்துவது இயற்கை யோடியைந்த வாழ்வு நடாத்துவதாகும். அதாவது சன்மார்க் கத்தில் நிற்பதாகும்.

நமது நாடு.

நமது நாட்டில் உலகியற்றுறைகளும் உயிரியற்றுறைகளும் செம்மை நெறியில் இயங்கு முறையில் மக்கள் இயற்கை வாழ்வு நடாத்திவந்தார்கள். வந்தகாலில் நாடு செழுமையுற்றிருந்தது. அந்நாளில் தோன்றிய கலைகளின் பெருக்கை என்னென்பேன்! வீரர்களின் பெருக்கை என்னென்பேன்? அறப்பெருக்கை என்

சமரச சன்மார்க்கம்.

னென்பேன்? அப்பொழுது நமது பாரத அன்னை முடியணிந்து, கலையணிந்து, செங்கோலோச்சி, அரியாசனத்தில் வீற்றிருந்தாள். அரசியல் குடியியல் அழகோடியங்கின, அன்பும், அருளும், ஆறுக ஓடின. எங்கணும் இயற்கையறம். எங்கணுஞ் சன்மார்க்கம். எங்க ணும் இன்பவாழ்வு.

பின்னை நாளடைவில் பாரதமாதாவின் மூடியுங் கலை யும் செழுமையும், கொழுமையும் வளனும், நலனும், பிறவும், மெல்ல மெல்ல நெகிழ்ந்து நெகிழ்ந்து சுருங்கிச் சுருங்கி இறுகலாயின. இந்நாளில் பாரதத்தாய் அடிமைக்குழியில் வீழ்ந்து கிடக்கிறாள். இச்சிறுமைக்குக் காரணமென்னை?

வாழ்விற்கென ஏற்படட தொழின் முறைகளை நடாத்திவந்த மக்களுக்குள் பிறப்பில் ஏற்றத்தாழ்வு புகுந்தமையே சிறந்த காரணம். தொழிற் பிரிவுகள் பிறப்புப் பிரிவுகளாக மாறின. இப்பிறப்புவழி ஏற்பட்ட பிரிவுகள் இயற்கைக்கு மாறுபட்டன வாகலான், அந்நாள் தொட்டு மக்கள் சன்மார்க்கமெனும் இயற் கை வாழ்வினின்றும் பிறழ்ந்து, துன்மார்க்கமெனுஞ் செயற்கை யில் வீழலானார்கள். இபபிறழ்ச்சியால் பார்ப்பனன் பிள்ளை பார்ப்பனனாகவும், அரசன் பிள்ளை அரசனாகவும், வாணிபன்பிள்ளை வாணிபனாகவும், தொழிலாளன் பிள்ளை தொழிலாளனாகவும் கரு தப்பட்டனர்.

ஆசிரியத் தொழில்பூண்டிருந்தோர் அரசர்களைத் தம்வயப் படுத்தித் தம்வழி உலகமியங்கவேண்டுமென்னும் எண்ணங் கொண்டு முயன்றுவந்த வேளையில் இடைதேவர், மகாவீரர் புத் தர், முகலிய அருளாளர் தோன்றிப் பிறப்பால் வருபுரைவற்றுமை கூடாது என்று எதிர்த்துவந்தனர். இம்முயற்சியில் புத்தர் பெ ருமான் வெற்றியும் பெற்றார். மீண்டும் நாடு சன்மார்க்கமெனும் இயற்கை அறநெறியில் இயங்கலாயிற்று. அவ்வியக்கத்தை ஒங்க விடாது பார்ப்பனர் சிறுமுயற்சியால் தகைத்து வந்தனர். நாளுக் குநாள் புத்தர் பெருமான் அறவரை ஆக்கம்பெற்று வருவது கண்ட பார்ப்பனத்தலைவர் சிலர் பௌத்த சமயம் புகுந்து

பௌத்தசமய ஆக்கத்தையே மாய்த்தனர். அன்று மீண்டும் எழுந் தபார்ப்பனர் பின்னோரில் தமக்கு எத்தகை இடையூறும் நே ராதவாறு எவ்வக் கோட்டைகள் கட்டவேண்டுமோ அவ்வக் கோட்டைகள் கட்டிக்கொண்டனர். பௌத்த மதக்கிளர்ச்சி தோன் றுதிருக்குமேல் பார்ப்பனர் தமது நலன்கருதி இத்துணை அரண் கள் கோலியிருக்கமாட்டார்கள். அச்சமேலீட்டான் அவர் இயற் கைக்கு மாறுபட்ட பல துறைகள் வகுத்தனர் பாவம்!

முதல் முதல் பெண் மக்களும், தொழிலாளர்களும் கல்வி கற்றலாகாது என்னுஞ் சட்டஞ் செய்யப்பட்டது. கல்வியில்லா மக்கள் விலங்காதல் இயல்பன்றே? பெண்மக்கள் அருள்பூத்த நெஞ்சினராகலான், தங்கள் (பார்ப்பனர்கள்) கொடுமைகண்டு பொறாது, அறக்கிளர்ச்சிக்குத் துணைநிற்பரெனக் கருதி அவர்கட் கு (பெண்மக்கட்கு) கல்வி மறுக்கப்பட்டது. வேதகாலத்தில் பெண் மக்கள் பலர் பெரும் பண்டிதைமாராக விருந்தனர். ஸ்மிருதி யில் பெண்கல்வி மறுப்புக் காணப்படுகின்றது. ஸ்மிருதிகள் புத் தர் காலத்திற்குப் பின்னரே எழுதப்பட்டன. இதனால் வேணடு மென்றே பெண்கல்வி மறுக்கப்பட்டது கவனிக்கத்தக்கது.

தொழிலாளர் தொகையில் பெரும்பான்மையோராக விருத் தலான், அவர் கற்றவராயிருப்பின், புத்தர் அறக்கிளர்ச்சி போன்ற தொரு கிளர்ச்சி எழுமேல், அதற்கு அவர் துணைபுரிவரென்றஞ்சி அவர் கல்விகற்றலாகாது என்னும் விதிசெய்யப்பட்டது. பின் னும் நாளடைவில் மேல்வகுப்பார் தம்மைக் கடவுளென்று மற்ற வகுப்பார் கருதித்தமக்கு ஏவல்செய்யுமாறு பலவிதிகள் நிறுவி னர். உயர்வகுப்பார் பிறப்புரிமை பழைய நூல்களினிடையே செருகப்பட்டது. அப்பிறப்புரிமைக் காப்புக்கெனக் கோயில்கள் மடங்கள் கட்டப்பட்டன. உயர்வகுப்பார்க்குள்ள உரிமைகளும் மற்றவர்க்குள்ள சிறுமைகளையும் ஸ்மிருதிகளில் இன்னுங்காணலாம்

இக்கொடுஞ்சட்டங்கள் நற்தமிழ்நாட்டில் தலைகாட்டியபோது அப்பொழுது தமிழ்நாட்டில் வதிந்த திருவள்ளுவனார் முதலி யோர் "பிறப்பொக்கும்" எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா,

செய்தொழில் வேற்றுமையான்'' என்று பிறப்புரிமைக் கொடுமை யைக் கடிந்தனர். எவர் கடிந்தும் பிறப்பில் உயர்வு தாழ்வு கரு தும் முறையாண்டும் பரவலாயிற்று. நாட்டின் பெரும்பான்மை யோர் கல்வி யின்மையால் அம்முறைக்கு அடிமையாயினர். என்செய்வது?

இயற்கை நெறிக்கு மாறுபட்டுப் பிறப்பில் உயர்வு தாழ்வு கொண்ட செயற்கை வாழ்வுநாட்டில் நடந்து வந்தது. சன்மார்க் கம் ஒழிந்து சாதிமார்க்கம் எழுந்தது. இச்செயற்கை முறையால் விளைந்த தென்னை? நாடு எல்லாநலன்களையுமிழந்து அடிமைக்குழி யில் வீழ்ந்த தொன்றே விளைந்தபயன். தொடரும்.

ஓ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமத் இராமலிங்கஸ்வாமிகள்.

(திலலையாளி த. வேதியப்பிள்ளையவர்கள்)

மலர் க. இதழ் க. பக்கம் ரூன் தொடர்ச்சி.

சடாந்தசமரச சுத்தசன்மார்க்கசங்கம் என்பதின் பொரு ளாவது:— ஆறுவிதமானமுடிபுகளும் ஒன்றுபட்ட உண்மைநெறி யினரின் கூட்டமென்பதாம். ஆறுவிதமுடிபானது வேதாந்தம், சித்தாந்தம், யோகாந்தம், போதாந்தம், நாதாந்தம், கலாந்தம் என்னும்முடிவுகளாம், இவை சமயஆராய்ச்சியில்மூழ்கி தத்துவ விசாரணையிலீடுபட்டு முதிர்ந்தபெரியோர் தாம்அநுபவித்துக்கண் ட முடிபுகள் ஆறுவிதமாயிருக்குந்தன்மையவாம். சமரசமாவது இவற்றின் ஒன்றுபட்டதன்மையாம். ஒருநகரத்துக்குட் செல்வ தற்கு ஆறுபாட்டைகளிருக்கவும், அவ்வப்பாட்டையாய்ச் செல் லுவோரும் தந்தம்பாட்டையேசரியென்றும் மற்றவை சரியன் றென்றும் தம்முள்வாதம்புரிவதுபோல, யோகியர் ஆறுவகையி னராய்க்கண்ட ஆறுமுடிபுகளினும் தாந்தாம்கண்டமுடிபே சரி யென்றும், மற்றவையன்றென்றும் வாதிப்பார்களாயினும் அவை யொன்றனுக்கொன்று செல்லுநெறி வேறுபட்டுக் காணப்படினும்,

ஸ்ரீமத், இராமலிங்கஸ்வாமிகள்.

ஒன்றையொன்று பற்றிநிற்கும் பெற்றியுடைத்தாய் ஒரேமுடிவை யுடைத்தானவையாமென்பது சமரசஞானிகள் கண்டவுண்மையாகும். கடவுள்ஒருவரேயென்பது எங்ஙனம் மறுக்கொணாவுண்மையாகுமோ அங்ஙனமே, ஆன்மாக்கள் மலபந்தம் நீங்கியடையும் முத்திநிலையும் ஒன்றேயாயிருக்கவேண்டுமேயொழிய இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறுயிருக்குமென்று எவரும் எண்ணத்துணியார். இதனைவள்ளலார் "ஆறந்த நிலைகளின் அநுபவ நிறைவே" என்று கூறிவிளக்கியிருப்பதனாலுமறிக. முத்திநெறியில் முயலும்உத்தமர் ஆறந்தங்களினும் விகற்பித்து, வாதித்து நின்றுழலாமல் அவையொன்றேயென்னும் முண்மையை யாவரும் அறிந்துய்ய வேண்டுமென்னும் அவாவுந்துதலினாலேனே ஸ்வாமிகளின்முயற்சியினின்றும் சடாந்த சமரசம் எழுந்து வெளிப்போந்தது. சுத்தசன்மார்க்கமாவது குறிப்பிட்டசிலசமயசன்மார்க்கம், மதசன்மார்க்கம், ஒழுக்கசன்மார்க்கம், முதலிய சனமார்க்கங்களேப்போலாது அவற்றையெல்லாந் தன்னகத்தேதயடக்கி ஜீவகாருண்ணிய வொழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, ஆன்மநேயஉரிமைப்பாட்டையுணர்ந்து சாதிமத வேற்றுமைகளைத்துறந்து, சமரசநிலையைக் கடைப்பிடித்து திருவருளிலீடுபட்டு, எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுமேயல்லாது வேறொன்றறியாத தன்மைபராய் ஒருவர் செல்லுநெறியே சுத்தசன்மார்க்கமாகும். சங்கமென்பதுகூட்டம் அல்லதுசபை எனறுபொருள். மேற்சொன்ன ஆறுமுடிபுகளையும் சமரசப்படுத்தி சுத்தசன்மார்க்கத்தைக் கைக்கொண்டொழுகும் தன்மையுடையார் ஒனறுசேர்ந்து தம்முடையமார்க்கத்தைத் தமக்கும் பிறர்க்கும் பயனபடுமாறு போதிக்குங்கூட்டமே சடாந்த சமரச சுத்தசன்மார்க்க சங்கமாகும். (தொடரும்.)

முக்கிய கவனிப்பு.

மலர் 1. இதழ் 2 ல். 46-வது பக்கத்தில் வெளிவந்த நூல் மெனியீட்டின் 19-வது வரியில்-15-பண்டாரமும்மணிக்கோவை 16-பதி, பசு, பாசப்பனுவல். இவற்றுட்பொருளை விளக்கும் சித்தாந்த நிச்சயம். சிவானுபோகசாரம் பரமதாமிரபரனி, பரமத சங்கற்ப நிராகரணம், பரமோபதேசம், ஜீக்கியவியல், சிவதருமோத்தரம், சைவசமயநெறி வடமொழியிற் சச்சிதானந்த (சிவஞானபோதம்) கிருத வியாக்கியானம், வர்காச்சிரம சந்திரிகை, சைவசந்நியாசம் எனபதைத் தயைகூர்ந்து சேர்த்துக்கொள்க. பர்

அருட்பிரகாசம்.

ஜீவகாருணியஒழுக்கம்.

(திருவருட் பிரகாச வள்ளலார்)

49-வது பக்கம் தொடர்ச்சி.

சீவர்கள் முன்தேகத்தில் செய்த பாவகர்மங்கள் இந்தத்தேகத்திலும் வருமென்பது எப்படியென்னில்; ஒருசமுசாரி முன்குடித்தனஞ் செய்திரு ந்தவீட்டில் தன்தலைவன் கட்டளைப்படி நடவாமல் தன்மார்க்கர்களை வரு வித்து அவர்களோடுகூடிப்பழகி யிருந்தானுனல் அந்தச்சம்சாரி யந்தவீட் டைவிட்டு வேறொருவீட்டில் குடிவந்தகாலத்திலு மந்தத் தன்மார்க்கர்கள் இந்தவீட்டிலும்வந்து அவனுடன் பழக்கஞ்செய்வார்கள். அதுபோல், ஒரு சீவன் முன்குடியிருந்ததேகத்தில் கடவுள்கட்டளைப்படி நடவாமல் தன்மா ர்க்கத்தார் பாபகர்மங்களைவிரும்பிச் செய்திருந்தானுனு லந்தச்சீவன் வே றொருதேகத்தில் வந்தபோது மந்தப்பாபகர்மங்க ளிப்போதுவந்ததேகத்தி லும்வந்து அந்தச்சீவனைச் சேருமென்றறியவேண்டும். முன்பிறப்பில் சீவ காருணிய வொழுக்கத்தைவிட்டுத் தன்மார்க்கத்தில் நட்டசீவர்கள் இந்தப் பிறப்பில் பசி, தாகம், பயமுதலியவற்றால் துக்கப்படச்செய்வது கடவுளரு ளாக்கினை யெனில் அந்தச்சீவர்கள்விஷயத்தில் காருண்ணியம் வைத் து ஆகாரமுதலியவைக்கொடுத்து அவர்கள்துக்கத்தைமாற்றுவது கடவுளரு ளாக்கினைக்கு விரோதமாகாதோவென்னில்:- ஆகாது, அரசன் தன்கட் டளைக்கு முழுதும்விரோதித்துக் கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச் சாலையிலிருக்கின்ற பெரியகுற்றவாளிகளுக்குந் தன்சேவகர்களைக்கொண்டு ஆகாரங்கொடுப்பிக்கின்றான், அதுபோல்கடவுள் தன்கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தஞ்செய்யப்பட்டு நரகத்திலிருக்கின்ற பாபி களுக்குந் தன்பரிவாரத் தேவர்களைக்கொண்டு ஆகாரங்கொடுப்பிக்கின்றான். அரசன்தன்கட்டளைப்படிநடவாமல் வேறுபட்ட சாதாரண குற்றமுடைய வர்களைத் தன்னுலவர்கள் பெறத்தக்கலாபத்தைப் பெறவொட்டாம லுத் தியோகத்தினின்றும்நீக்கி யவர்களுக்கு நல்லதிவுவருகின்றநிமித்த மவ்விட த்தைவிட்டு வேறிடங்களில்வெளிப்படுத்துகின்றான். அவர்கள்உத்தியோக மிழந்தபடியால் சுகபோஜனமுதலியபோகங்களையிழந்து ஊர்ப்புறங்களில் போய் ஆகாரமுதலியவைகுறித்து அலைந்துவருதுகின்றபோது தயவுள்ள வர்கள்கண்டு ஆகாரமுதலியவை கொடுக்கின்றார்கள், அதையரசன்கேட்ட காலத்திலுங் கண்டகாலத்திலுங் கொடுத்தவனை யிரக்கமுள்ள நல்லசமு சாரியென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானேயல்லது கோபிக்கவில்லை. அதுபோல் கடவுள் தன்கட்டளைப்படிநடவாத சாதாரணக் குற்றமுடைய

ஜீவகாருணிய ஒழுக்கம்.

சீவர்களைத் தமதுசத்தியால் அவர்கள்பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தான்கொடுத்த சௌக்கியபுவனங்களைவிடுவித்து அந்தச்சீவர்களுக்குநல்லறிவுவருவிக்குநிமித்த மந்தத்தேகத்தில்நின்றும்நீக்கி வேறொருதேகத்தில் விடுகின்றான். அந்தச்சீவர்கள்சௌக்கியபுவனபோகங்களை யிழந்தபடியால் சௌக்கியபோஜனமுதலியவற்றையிழந்து வேறுவேறிடங்களிலாகாரமுதலியவையில்லாமல் வருந்தும்போது தயயுள்ளவர்களந்தவருத்தத்தைக் கண்டு ஆகாரமுதலியவைகொடுத்தாலப்படிக்கொடுத்தவர்களை நல்லவிரக்கமுள்ளவர் மேன்மேலுஞ் சுகத்தையடையக்கடவர்களென்று சந்தோஷித்து உபசரிப்பார்களது கோபிக்கமாட்டார். ஆதலால் கடவுள்அருளாக்கினைக்குச் சீவர்களிடத்துச்சீவர்கள் காருணியம்வைப்பதே சம்மதமென்று உண்மையாக வறியவேண்டும். இந்தசீவகாருணியத்தால் இகலோகவொழுக்கம் வழங்குகின்றது. சீவகாருணியமில்லையாகில் இகலோக வெழுக்கமெவ்வளவும் வழங்கமாட்டாதென்றறியவேண்டும். எப்படியென்னில்; சீவகாருணியமில்லாதபோது அறிவும் அன்புந்தோன்றாது. அவைதோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்காது; அவைவிளங்காதபோது வலியசீவர்களா லெளியசீவர்களொழுக்கம் பொறுமை முதலானவைகள் தடைபட்டழிந்துபோம். பின்புவலியசீவர்கள் ஒழுக்கங்களுந் தாமசஒழுக்கங்களாகி ஒருவரொழுக்கத்தால் மற்றொருவரொழுக்கம் மதத்தினுற்சோர்வடைந்து மாறுபட்டழிந்துபோம். சீவகாருணியஒழுக்கஞ் சிறுதுமில்லாத புலிசிங்கம் முதலியமிருகங்கள் வழங்குகின்றகாட்டில் இகலோகவொழுக்கம் வழங்கவேயில்லை. அதுபோல் சீவகாருணியமில்லாத மனிசர்கள் வழங்குமிடத்திலும் இகலோகவொழுக்கம் வழங்கவேமாட்டாதென்றறியவேண்டும்.

பரலோகவொழுக்கமுஞ் சீவகாருணியத்தால்வழங்குகின்றது. அதுவில்லையாகில் பரலோக வொழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படியென்னில்:-சீவகாருணியமில்லாதபோது அருள்விளக்கந்தோன்றாது. அதுதோன்றாதபோது கடவுள்கிலை கைகூடாது. அதுகூடாதபோது முத்தியின்பமொருவரு மடையமாட்டார்கள். அடையாதபட்சத்தில் பரலோகவொழுக்கம் வழங்கவேமாட்டாதென்றறியவேண்டும். சீவகாருணியஒழுக்கம் மிகவும் வழங்காமையால் தன்மார்க்கப் பிரவியேப்பெருகி யெங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றதென்றது எப்படியென்னில்:- சீவகாருணியமில்லாத கடினசித்தர்களெல்லா மவரவர் கடினச்செய்கைக்குத்தக்கபடி, சிலர் நரகவாசிகளாகவும், சிலர் சமுத்திரவாசிகளாகவுஞ், சிலர் ஆரணியவாசிகளாகவும் சிலர் புலி, கரடி, சிங்கம், யாளி, யானை, கடமை, கடா, பன்றி, நாய், பூனை, முதலியதுட்டமிருகங்களாகவுஞ், சிலர் பாம்பு, தேள், முதலியவிஷசெந்துக்

களாகவும், சிலர் முதலே, சரு முதலியகடினசெத்தக்களாகவுஞ், சிலர் கர்க்கை, கழுகு முதலியபட்சிசண்டாளங்களாகவுஞ், சிலர் எட்டி, கள்ளி முதலிய அசுத்ததரப்பங்களாகவும், பிறந்திருக்கின்றார்கள். ஆகலால் புல்லொழுக்கங்களே மிகவும்வழங்குகின்ற தென்றறியவேண்டும். சிவகாருணியம் கடவுளருளைப்பெறுவதற்குமுக்கியசாதனமென்பதுமல்லாமல்அதுவேயவ்வருளின் எகதேச விளக்கமென்று மறியவேண்டும்.

அன்பு.

(மலர்-க இதழ்உ- ருஉ பக்கம் தொடர்ச்சி.)

ஸ்ரீமத் வள்ளலார் விண்ணப்பத்திற் சொல்லியபடி சமயாதிஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணாஸ்ரமாசாரசங்கற்ப விகற்பங்களும் மனதிற்பற்றியிருப்பதே பாசஅன்பாகும். நான்என்னும் அகங்காரமும், எனது என்னும் மமதையும்உள்ளவரையில் ஞானம்ஒருநிதம் உண்டாகாது. ஞானம் இல்லாதவரையில் உண்மைபன்புந் தோன்றாது. ஆகலால் இவ்வுண்மையன்பின் தடையாகிய சமயம் மதம் சாதி முதலியவற்றின் அபிமானத்தை விலக்கவேண்டும். நமக்குத்துணைபாகியசரீரம் அநித்தியமென்று பல விதத்திலுங் காண்கின்றோம். ஆனல்அதை விட்டுவிடுகின்றோமில்லை. அதனுடகூடியே நாம்உலாவிவருகின்றோம். நாம்விட்டுவிடுவதற்கியலுமோ? இயலாது. நாமாகத்தேடிக்கொண்டோமா? இல்லை. அதுவினைக்கிடாகவந்தது. வினைநீங்கும்போது போய்விடும். அதற்காகநாம் கவலைபடையவேண்டியதில்லை. நம்முடைய முயற்சியினாலேயே நம்முடைய சரீரத்தைக் காப்பாற்றுகின்றோம் நம்முடையமுயற்சியில்லாதவரையில் சரீரமிறந்துபோகுமென்றறிஞர்தல்பேதமையே. நமதுமுயற்சியில்லாத கர்ப்பத்திலும் இளம்பிராயத்திலும் காப்பாற்றினதுயார் அவர்இப்போது எங்கேபோய்விட்டார்? எவரும்போகவில்லை. எப்போதும்காப்பாற்றுபர்அவரே. அவர்செய்விக்கச்செய்கின்றோம். அவர்வாட்டுவிக்கவாடுகின்றோம். அவர்காட்டுவிக்கக் காண்கின்றோம். அவர்உறக்குவிக்க உறங்குகின்றோம். அவர்ஆட்டுவிக்க ஆடுகின்றோம். அவரன்றிநம்மாலொன்றுமே முடியாது என்பதுஉண்மை.

பாடுவித்தாற் பாடுகின்றேன் பணிவித்தாற் பணிகின்றேன்
பதியே நின்னைக்
கூட்டுவித்தாற் கூடுகின்றேன் குழைவித்தாற் குழைகின்றேன்
குறித்த வூணை
யூட்டுவித்தா லுண்கின்றே னுறக்கவித்தா லுறங்குகின்றே
னுறவா தென்று
மாட்டுவித்தா லாடுகின்றே னார்தோ விச்சிறியேற்
காவதென்னே.

அன்பு.

என ஸ்ரீமத் வள்ளலார் கூறியிருக்கின்றார். நாம்நமது சரீரத்தினியக்கத்திற்கே காரணமாயில்லையென்றால் நமதுசமயம், நமதுமதம், நமது வருணம் நமது ஆசிரமம் என்று நாம்என் புறப்பற்றின் மோசத்திற்குள்ளாகவேண்டும். நாம்சமயத்தை உண்டுபண்ணினோமா? நாம்நமதுசமய மென்று வீணுகஅபிமானத்தை யேற்றிக்கொள்ளுகிறோம். சமயத்தைக்காப்பாற்றுவது நமதுகடமையல்ல. சமயத்தின்உண்மையை யறிந்து நடப்பதுதான் நம்முடையகடமை. தேகத்தைக்காப்பாற்றுவது நமதுகடமையல்ல. தேகத்தினுண்மையையறிந்து நடப்பதுதான் நம்முடையகடமை. நாம் கவனிக்காதவரையில் சமயம்அழிந்துபோகுமே. மதம்அழிந்துபோகுமே. வருணம் அழிந்துபோகுமே. ஆசிரமமழிந்துபோகுமேயென்று சமயவெறி மதவெறி முதலியவெறியினால் நமதுமுக்கியலட்சியமாகிய அன்பையிழக்கின்றோம். நாம்இத்தன்மையுடையோமென்று சொல்லிக்கொள்ள வேண்டுவதில்லை. நம்முடைய நடையே இத்தன்மையுடையோமென்று நம்மை வெளிப்படையாகக்காட்டிவிடும்.

இதுபற்றியே ஸ்ரீமத், வள்ளலார்.

பேருற்ற வுலகிலுயர் சமயமத வெறியெலாம்
பேய் பிடிப்புற்ற பிச்சப்
பிள்ளை விளையாட்டென வுணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற்றிறந்து வீண் போயினுன்னும் வீண்
போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டியெம்பொருளினை யுணர்த்தி யெல்லா
மேருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாதலால
யிவ்வேலை புரிக வென்றிட்டனன் மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள கற்று மொளியே
நிர்க்குணனந்த பர நாதாந்தவரை யோங்கு
நீதி நடராஜ பதியே.

எனக்கூறியருளினர். ஆகலின் பிள்ளைவிளையாட்டிலே புத்தியைச் செலுத்தாதவண்ணம். "எவ்வுயிர்க்குமினியாயிரு" என்னும் ஆன்றோர் வாக்கியப்படி எல்லாவுயிர்களிடத்தும் பொதுநோக்காகப் பார்க்கப்பழகுவதே அன்பின் வழிபாடாம்.

அருட்பிரகாசம்.

எவ்வுயிர்த்திரளு மென்னுயிரெனவே
யெண்ணி நல் லின்புறச் செயவு
மவ்வுயிர்களுக்கு வருமிடையூற்றை
யகற்றியே யச்சநீக்கிடவுஞ்
செவ்வையுற்றனது திருப்பதம்பாடிச்
சிவசிவவென்று கூத்தாடி
யெவ்வுறு களிப்பா லழிவுரு திங்கே
யோங்கவு மிச்சையா மெந்தாய்.

கருணையே வடிவாய்ப் பிறவுயிர்க்கடுத்தக்
கடுந்துய ரச்ச மாதிகளேத்
தருணநின் னருளாற் றவிர்த்தவர்க் கின்பந்
தரவும் வன்பூலை கொலைஇரண்டு
மொருவிய நெறியி லுலகெலாநடத்த
வுளற்றவு மம்பலந்தனிலே
மருவிய புகழை வழுத்தவு நின்னை
வாழ்த்தவு மிச்சைகா ணெந்தாய்.

மண்ணுலகதிலே வுயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொருசிறி தெனினுங்
கண்ணுறப்பார்த்துஞ் செவியுறக்கேட்டுங்
கணமுநான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா
லிசைத்தபோ திசைத்த போதெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்க நல்வாந்தா
னல்குத லெனக்கிச்சை யெந்தாய்.

என ஸ்ரீமத் பெருமானர் கூறியபடி. எந்தக்காலத்திலும் எந்தவிதத் திலும் அன்புக்கு மாறுபாடாகிய விகற்பங்களிலே புத்தியைச்செலுத்தாதவ ராய் ஆன்மநேய வரிமைப்பாட்டை யடைந்து வாழ்வதே அன்பின் வாழ் க்கையாம் மற்றையவாழ்க்கை வாழ்க்கையல்ல.

"அன்புடையாரெல்லாருஞ் சமரசசன்மார்க்கஞ் சாந்தவமோ,, எனவும்

வருமுயி ரிரக்கம் பற்றியே உலக
வழக்கிலென் மனஞ் சென்றதோறும்
வெருவி நின்னடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேனின்று

அன்பு.

முருவ வென்னுயிர்தர வுயிரிரக்கந்தா
ஞென்றதே யிரண்டிலே யிரக்க
மொருவி லென்னுயிரு மொருவு மென்னுள்ளத்
தொருவனே நின்பதத்தானே

தலைவர்களெல்லாந் தனித்தனி வணங்குந்
தலைவனே யின்று மென்னுளமும்
மலைவி லென்னறிவு நானு மிவ்வுலக
வழக்கிலே யுயிரிரக்கத்தால்
இலகுகின்றன நானென் செய்வே
னிரக்க மென்னுயி ரென்னவேநிலையே
நிலைபெறு மிரக்க நீங்கி லென்னுயிரு
நீங்குகின் றிருவுள மதியும்

ஆதலா லிரக்கம் பற்றிநா வுலகி
லாடலே யன்றியோர் விடயக்
காதலா லாடல் கருதிலேன் விடயக்
கருத்தெனக் கில்லை யென்றிடவிப்
போதலாற் சிறியபோது முண்டது நின்
புந்தியி லறிந்தது தானே
யீதலால் வேறோர் நீதெனதிடத்தே
யில்லை நானிசைப்பதென் னெந்தாய்

என்னையு மிரக்கந் தன்னையு மென்று
மிருக்கவே யிசைவித் திவ்வுலகில்
மன்னிவாழ்வுறவே வருவித்த கருணை
வள்ளல் நீ னினக்கிது விடயம்
பன்னலென் னடியேனு யினும்பின்னோப்
பாக்கினு லுரைக்கின்றே னெந்தாய்
யின்னவா றெனநீ சொன்னவா றியற்று
திருந்ததோ நிறையுமிங் கிலையே.

எனவும் பெருமானர் கூறியதற்கெற்ப உயிர்களிடத்து இரக்கச் சிந்தனையில்லாதவரையில் உயிரில்லாதபிணமாமென்பது வெளிப்படை. நாம் பிணத்தன்மையைநீக்கி அன்புடையவர்களாகித் துன்பத்திற் கேதுவாகிய சமயமதக்கட்டுப்பாட்டுகளைத்துறந்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத பேரின்பப் பெருவாழ்வில் வாழவேண்டு மென்பதே துணிபு. இத்தகைய ஆன்மலாபத்தை அடைவதற்குச் சுயநலக்கருதாமை

அருட்பிரகாசம்.

யே முக்கியமானதாகும். சமுத்திரத்திலே ஆலகாலவிஷமும், அமுதமும் பிறந்திருக்கின்றதுபோல நம்மிடத்தில் அன்பும் விகற்பமும் நிறைந்திருக்கின்றது. ஆலகாலவிஷமென்பது இளிஞ்சில். அமுதம்என்பது உப்பு. இளிஞ்சிலும் உப்பும் நமதுதேகவாழ்க்கைக்கு அவசியமானதுதான். ஆயினும், உப்பைப்போல இளிஞ்சில்சுண்ணாம்பை உபயோகிக்கின்றோமில்லை. அதைப்போல, அமுதம்போன்ற அன்பை நாம்அடிக்கடி புசித்தல்வேண்டும். அதனை நமக்கும், பிறர்க்கும், பயன்படுத்தல்வேண்டும். இஃதன்றி வேறு எந்தவிதத்திலும் மேன்மையடைதல் முடியவே முடியாதென்பது சத்தியம். தொடரும்.

தமிழர்.

ஸ்ரீமான், நா. தம்பியப்ப செட்டியாரவர்கள்,
(மலர் 1. இதழ் 2. பக்கம் 44-ன் தொடர்ச்சி)

எத்தனையோ காலங்கட்கு முன்னரே இம்மன்னஞ்செல்லாம் போரிற் சிறந்த பெருவீரமும், அவ்வீரச்செயற்கேற்ற அரண்கருவி, படை, யானை, குதிரை, தேர்முதலியனவும் உடையவாயிருந்தனஞ்சென்றும், சங்கத் தமிழ் நூலுணர்ச்சியுடையார் எவரும் எளிதில் அறிவர். இவர் நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண், எனப்பட்ட நால்வகைபரணும் உடையராயிருந்தனர். பண்டொரு காலத்துப் பாரியென்னும் வள்ளற்றலைவற்குரிய பறம்பு என்னும் மலையரணைச் சேரன், சோழன், பாண்டியன் எனப்பட்ட மூவேந்தரும் போர்க்கோலங்கொண்டு படையெடுத்து வளைத்திருந்த காலத்து நெடுங்காலம் அடைமதிற்பட்டதாக, ஆண்டிருந்த பாரிக்குயிர்த்துணையாய்ச்சிறந்த கபிலர் என்னும் புலவர்பெருமான் கிளிகளைப்பழக்கி, அரண்புறத்து நெடுந்தூரத்துள்ள விளைநிலன்களினின்று விளைகதிர்களைக் கொணர்வித்து அப்பாரியையும் அவன் படை குடிகளையும் முற்றுகை நீங்கும்வரை பாதுகாத்தனனென்பர். இவ்வரியசெயலை "உலகுடன் றரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக்கபிலன் சூழச்சேய்நின்று, செழுஞ்செந் நெல்லின் விளைகதிர்கொண்டு, நெடுந்தாளாம்பன் மலிதொடு கூட்டி, யாண்டு பலகழிய வேண்டுவயிற்பிழையா, தாளிடுக்கடந்து வாளமருழக்கி, யேந்துகோட்டியானை வேந்தரோட்டிய, கடும்பரிப்புரவிக்கை வண்பாரி" என்னும் அகப்பாட்டானும் (எ அ) கன்கறிந்துகொள்க

தமிழர்.

போர்களிற் பரவைகளைப்பழக்கிப் பயன்கொள்ளும் இவ்வரிய செயல் இக்காலத்து மேற்றிசைப்புலவர்களாற் சிறப்பித்துப் பாராட்டப்படுவதுண்டு. இஃது இற்றைக்கு ஈராயிர வருஷங்கட்கு முன்னர் இத்தமிழ்நாட்டகத்து மூவேந்தருக்கும் பாரிக்கும் நிகழ்ந்த பெரும்போரில் நடந்த பெருஞ்செயலாகக் காட்டலால் இத்தமிழரது தொன்மைப்பட்ட யுத்தநாகரிகம் நன்கறியப்படும். இவ்வாறு இத்தமிழ் மூவேந்தரும் அவர் படைத்தலைவரும் குருநில மன்னரும் நிகழ்த்திய வீரச்செயல்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆசைக்கப்புகின் வரம்பிலவாக நிறையும், போர்வகைகளுள் "பகைவர் நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டுநின்றும் அகற்றிப் பொருதல் தலையாய அறம். அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான்கொண்டு பாதுகாத்தல் அதனினிழிந்த இடையாய அறம். அதுவுமன்றி பிறர்க்கு அளித்தற்கு நிரைகோடல் நிகழினும் அது அதனினுமிழிந்த கடையாய அறமெனப்படும். இனி பகைவன் போற்றாத நாட்டைக் கைக்கொண்டு தான் போற்ற செல்லுதலும். பொருள் வருவாய் பற்றிச் செல்லுதலும், வஞ்சித்துச்செல்லுதலும் போல்வன. ஒன்றினின் ஒன்றிழிந்த ஞாலத்து நடக்கைக் குறிப்பு. போரில் எவரானும் மதிக்கப்படும் வீரனுப் விளங்கி வுயிர்விட்டவனை எக்காலமும் ஞாபகப்படுத்துமாறு அக்காலத்தவர் செய்திருந்த ஏற்பாடுகளும் உள்ளன. வீரர் அக்காலத்து அதிகமாய் மதிக்கப்பட்டு வந்தனர். தம்கணவனேனும் தாம்ஈன்ற புதல்வனேனும் போரிற் புறங்காட்டியோடிவரக்காணின் அவர்மனைவியர், தாயர் முதலியோர் தாமே நாணால் உயிர்விடுவர். தன்மகன் போரில் எதிர்த்து நின்று போர்செய்து மடிந்தனன் எனக்கேட்டதாய் மகிழ்ச்சியெய்துவாள். இங்ஙனம் வீரச்செயல்களில் விளங்கிய வீரரை எக்காலமும் ஞாபகப்படுத்தும் சாதனங்களை ஏற்படுத்துவதும் வழக்கமாயிருந்தது. இறந்த வீரனின் ஞாபகார்த்தமாய் கல்தூணை நிறுத்தி அதில் அவ்வீரனின் பெயரையும் அவன்செய்த வீரச்செயல்களையும் வெட்டி அக்கல்லுக்கு நீராட்டி, எண்ணெயைப்பூசி, அதில் அம்மறவனையே தெய்வமாக நாட்டிச் சிறப்புச்செய்து அவனைத்தெய்வமாக வணங்கியதோடும் அமையாமல் அக்கல்லுக்குக்

அருட்பிரகாசம்.

கோயிலமைத்து மதில், வாயில் முதலியன கட்டி ஆலயங்களாக்கி அவ்வீசரைப் போற்றியும் வந்தனர். இரண்டாயிரம் யாண்டுகட் குமுன்னரே தம்வீசரை ஞாபகப்படுத்துமாறு இங்ஙனம் கல்நட்டு போற்பொரித்துவைத்த நம்முன்னோர் தன்மை எக்காலத்தும் அதி சயிக்கத்தக்கதாகவே இருக்கின்றது.

அக்காலம்வணங்கப்பட்ட தெய்வங்களாவன:-

மூல்லை நிலக்கோவலர் தமது பசுக்கள் பயன்தருமாறு மாயோனை வணங்கிவந்தனர். மாயோன் மகனுகிய கமனையும் வணங்கினரு முண்டு. குறிஞ்சி நிலத்துக்கடுத்தவர் ஒருங்குகூடி வெறியாட்டயர்ந்து முருகனைத் தொழுதுவந்தனர். மருதநிலமாக்கள் இன்பவிளையாட்டு இனிதினுகரும் இமையோருக்கும் எழிலிக்கும் இறைவனுகிய இந்திரனுக்கு விழவுகொண்டாடி அவனை வணங்கி வந்தனர். நெய்தனிலத்தோர் தம்வலை வளம் பெருகுதற் பொருட்டுச் சுறவுக்கோடுநட்டு வருணனை வணங்கினர்.

சூரிய சந்திரரிகளை வணங்கினர்பலர். ஒருபற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருளாகிய கந்தழியையும் வணங்கிவந்தனர். தர்க்கை கொற்றவை எனவழங்கிய தஷ்டதேவதைகளையும் போர்முகத்தில் வீரர் வணங்கியும் அவற்றிற்கு நரபலியும் வேறுபலிகளுங் கொடுத்துவந்தனர்.

(தொடருும்)

நூல்வெளியீடு.

பிரமஸ்ரீ,

C. S. நாராயணசாமி ஐயரவர்கள்,

சித்தர் நூல் ஆராய்ச்சி.

கடன்மடை திறந்தாலொத்த அளவிறந்த சாத்திரங்களை நமக்கு உபகாரமாயுதவியருளிய நம்தமிழ்நாட்டு சித்தர்களில், ரஸவாத, ரஸாயன சாஸ்திரத்தின் பாஷையையும், அதிஷ்டபொருள், அதிலுழைப்பு, ஆராய்ச்சி, அனுபவங்களையும், சென்றமுப்பது வருஷங்களின் தேர்ச்சியை முன்னிட்டும், இதரதேசக்களில் Hermatics, Magicans Myotics., Rosicrucians எனவழங்கிவருபவர்களின் சரித்திர ஞானத்தாலும், நம்தேசத்தவர்களின் ஞானத்தோடு தாரதம்மியப்படுத்திய, ஆராய்ச்சியால் இதைஎழுதி வெளிப்படுத்தலானேன்.

நம்முடைய தென்னாட்டிலும் வடநாட்டிலும் அனேகர் சித்தர்கள் என்றால் அதிக கௌரவத்தோடும், மதிப்போடும் பயத்தோடும்கூட கலந்

சுப்பிரமணிய விளக்கம்.

ததாகவே சொண்டாடுகிறதை நினமும்பார்த்திருக்கிறோம். ஆனால் அவர்களில் ரஸவாத சாத்திரமென்றால் பயமும் அருவருப்பு மூள்ளவர்களாகவே எல்லாபுத்திமான்களுங்கூட மனம்போனபடிக்கெல்லாம பேசுவதையும் பார்க்கிறோம், கேட்கிறோம். இப்படிக்கிருப்பதின் காரணமென்னவென்றால் அந்தசாத்திரத்தை அறிந்தக்கொள்ளாததாலும், படித்தவர்களுக்கு அந்தச்சாத்திரத்தில் நீர்க்புத்திவாராததாலுந்தான். அதைத்தீர்க்கவே இதையெழுவதற்கு முன்வந்தது எனலாம். (தொடரும்)

சுப்பிரமணிய விளக்கம்.

(மலர் 1. இதழ் 2. 57-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமத், திருவருட்பிரகாச வள்ளலார்.

பிண்டத்தில் இவ்வணமாகவிருக்க அண்டத்தில் இதகளுக்கு ஹர் ஆலயம் மூர்த்தி செய்கை முதலியன உண்டாவாமேன். ஆன்மாக்கள் புண்ணிய பாப கருமங்களால் பேதப்பட்டு மந்தம் மந்ததரம், ராஜசம், தாமசங், கருகம் முதலிய வேறுபாடுகளால் அனுதினதொடங்கி இன்றளவில் உயிர்த்திரள் ஒன்றனும் சரணக்கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றபடியால் மாகருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளே அங்கையிற் கனியெனவுணர்ந்த அனுகிரகித்திய முத்தசித்தராகிய ஈசுரதத்துவ புவனனுபவ ஈசுவரனுல் உய்யும்பொருட்டு உலகத்தின்கண் பாசநூல், பசுநூல், பதிநூல், அனுபவநூல், என்னும் புராண, வேத, ஆகம, உபநிஷத்துக்களே உண்டுபண்ணி அதன்வாயிலாக கர்மகாண்டம், பக்திகாண்டம், உபாசனாகாண்டம், தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை, முதலிய பேதங்களும் இதற்கு முக்கியமான ஆசாரம், வர்னம், ஆசிரமம் முதலியதகளும், இதற்கு ஏதுவான சரியாதி நான்கும், இதற்கடைவாகிய சாலோகாதிநான்கும், இதற்குமார்க்கமாகிய தத்துவம், புவனம், பதம், வர்ணம், மந்திரம், கலை, முதலியதாயும் நிர்ணயித்து, பாபநாசத்திற்கு ஏதுவான அனசன, சாந்திராயண முதலிய பிராயச்சித்தங்களே விதித்து இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதிமுதலியதுகளையும் அதற்குஅங்கமான தத்துவானுபவங்களாகிய உண்மைநாமங்கள் கெடாதிருக்க திருப்பெயர் முதலியதுகள் மூர்த்தி, ஸ்தலம் முதலியதுகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்வன. உபாசிக்கின்றவர்களுக்கு தத்துவநாமங்கெடாமல் அருட்சத்திதோன்ற கிருத்திகையும், வேதாந்தவிளக்கத்திற்கு விசாரத்தையும், சதாசுபத்தைகுறிக்க செவ்வாயும் ஆறுகுறியைகுறிக்க சஷ்டியும், ஞானநிறைவைக்குறிக்க தைப்பூசத்தையும், தத்துவங்களே கையிலெடுத்தாடுவதான போதமென்னுங்கையில் விஷய பலத்தை தத்துவமாகிய காவடியில்கட்டி தானுகிய தோளிலேற்றி

அருட்பிரகாசம்.

தான்கெட்டுத்தான் அவனுகி போதவடிவனுய், சங்கல்பதீவிரனும், சுப்பிரமணியதத்துவமாய் விளங்கும் திருவுருவம் மூன்றுக்கு விஷயபாவ நியாயமே காவடியெடுத்ததாய் சுத்தவைராக்கிய நிச்சய சிவபோதமே இடும்பனுய்குறிக்கப்பட்டு இருதயாகாச சட்கோணவடிவமே யந்திரமாய் அதன் அங்கவேறுபாடே நாற்பத்துமூக்கோணமாய் உபாங்கமே நவகண்டமாய், உண்மையே சகரமாய், விஷயநீக்கமே ரகரமாய், திருப்தியே அகரமாய், நிர்விஷயமே ணகரமாய், பாபநீக்கஞதுவே பகரமாய் ஆன்ம இயற்கைகுணமே வகரமாய் விளங்குவதே ஆறெழுத்தாயும், நமதுசரீர இருதயஸ்தானமே கோயிலாய், மாயாவிசித்திரமே மயிலாய், நாபியந்தமே பெலிபீடமாய், உண்ணுவின்மேலந்தமே கொடிமரமாய், பஞ்சகோசங்களே பிராகாரமாய் மூக்குணங்களே வில்வமரமாய், ஆன்மதயையே தடாகமாய், வாயேவாசலாய் அனுபவநிலையே கோபுரமாய் விதிக்கப்பட்டு, ஞானிகள் கடவுளே எங்கும் உபாசிப்பார்களென்றும், யோகிகள் இருதயத்திலுபாசிப்பார்களென்றும், கர்மகாண்டிகள் அக்கினியில், உபாசிப்பார்களென்றும், பத்திகாண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்களென்றும் விதித்து அதற்கு ஒத்தவண்ணம் தத்துவவிசாரத்தையே ஆலயமாக்கி, ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியை பாசங்களில் செல்லும் ஆன்மாக்களே சிவபாசதத்தில் பாசநூல்களேக்கொண்டு அழத்தி பசுநூல்களேக்கொண்டு மேற்குறித்த தந்திர, மந்திர, கலைகளேக் குருமூலமாய் உபதேசகலையாய் விளக்கி காண்டத்திரயத்தால் நிலைக்கப்பண்ணி பத்திநூலால் அறிவைவிளக்கி அனுபவநூலால் சமாதியைத்தெரிவித்திருப்பதை சீவர்கள் மறவாதிருக்க மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல் ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப்பெருமானே தத்துவவுருவமென்று விளக்கிக் காட்ட அர்ச்சக உருவமான ஆசாரியன் நமது அறிவாகிய கற்பூரத்தில் சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென்னும் பிரகாசத்தைக்கொண்டி அசுத்தவிஷயமுதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்கு புலப்படாமலிருக்க உண்மைஞானக்குரியாகிய மணிஒளியைக்கொண்டு தெரிசிப்பிக்கச்செய்து வேறு பாராக்கண்ணியில் ததாகாரமாய் நிற்க நமதுதரத்திற்கொத்த உபசாரதியார்களால் வழிபடச்செய்து தத்பலமடைய உத்தமர்கட்கு அன்னவினியோகம் செய்வது மார்க்கமென்று சித்தாந்தம் பண்ணினுர்கள்.

சக்கரவர்த்தி
சித்திவளாகம்
5—7—27.

(தொடரும்.)

மாணவர்பகுதி.

மாணவர் பகுதி.

(பிறையாறு ப. அ. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள்)

கற்றனவாம்பல்.

தும்பி மாமுகத் தூயோற் கியைய
தம்பி யெம்பரற் ருழ்ந்தது சாற்றுவாம்.

இத்தலையங்க சொற்றொடர் ஈறு திரியாது வந்ததேதர் பலவின் பாற் படர்க்கை வினையாலணைந்த பெயரானும் விகுதிபெற்றதோர் தொழிற்பெயரானும் யாக்கப் பெற்று, நாம்பகலிரவாய் உளமு முடலும் வருந்திக் கற்ற வொன்றைக் கருத்தி லமைக்க வேண்டும் என்னுஞ் சிறப்புயரிய பொருளினையும் பயக்கின்றது. இவ்வாறு கருதி யோம்பற்கு ஞாபக சக்தி யின்றியமையா தொன்றென்ப தெவரு மறிந்ததாம். இத்திற ஞாபக சக்தி இடைவிடாத அப்பியாசத்தானும் ஒன்ளிய கருத்துடன் ஊன்றி நோக்கும் இயல்பானும் வருவ தெனினும், விருப்பம் ஒன்றே இத்தூறையுள் இயக்கம் என்பது தானுஞ் யாய்வார்க்கு எளிது புலனும்.

ஒரு பொருளின் மீது விருப்பம் உண்டாய்விடின் அதனை யெளிதில் மறப்பார் எவரு மிலர். ஒருவன் மற்றையோனுக்குக் கொடுக்க வைத்துள்ள பொருளை அறிந்த அன்னன் அதனை அடைய எஞ்ஞான்றும் மறவாதிருப்பது தோன்றும். அழகியதோர் வீளையாட்டுப் பொருளை ஒரு பெண்குழந்தைக்கு கொடுக்க வாக்குக் கொடுத்திருப்பின் அதனைப்பெற அச்சிறுமி அனவரதமும் மறவாதிருப்பது போன்றும் நமக்கு விருப்ப முள்ள நூலொன்றைக் கற்கத் தவக்கின் விருப்பத்தான் நங்கண்ணுங் கருத்தும் அதிற் பொருந்தியுள சுவைத் தூறையுட் டோய்த லுண்மையே. அன்றியும், நாம் அச் சுவைத் திறனிலுள்ள விழைவான் அதனை விரைவில் மறந்து போக கவிபாட விரும்புநரும் சிற்பம் வரைய விரும்புநரும் எஞ்ஞான்றும் அவவத் தூறைகளிலேயே கண்ணுங் கருத்துமாய் நின்று, சீரும் தளையும் அடியும் தொடையும் சுவையும் பொருளும் வடிவும் வனப்பும் ஆகிய பிறவும் நம்மகத்திருத்தி வைத்தல் கண்கூடேயன்றே! ஆதலின் ஒருபொருளைக் குறித்து நாம மாவாதிருப்பதற்கு அப்பொருண்மீ துள்ள ஆசையே காரண மாகின்ற தென்பதும், அச்சன்மேல் நமக்கு விருப்பம் நிகழ்ந்து விட்டால் அது நம் மனத்தை விட்டு எப்போதும் நீங்காது எளிதில் பதியும் என்பதும் பெற்றாம்.

இவ்வாறு பதிதற்கு அதன்மீது விருப்பத்தை உண்டாக்கி விட வேண்டும். அசனை ஒருவன் அறிவு அநுபவங்களுக்கு இணங்க பலவழிகளிலும் விளக்கிக் காட்டல் வேண்டும். அவ்வாறு ஆக்குவிப்போ மானுல் அம்மாணவன் மனத்தைவிட்டு எக்காலு மகலாது பசுமரத்தாணி போல பதிந்திருந் திலகும். ஆசிரியர் முன்னிலையில் இவ்வாறு ஒழுகுவானேயன்றி பிறவழிகளிற் கற்பான் தொடங்குவான் கறி பயனில தாமெனல் ஒருதலை.

ஒன்றைக் கற்றற்கும் கற்றதொன்றைக் கருத்தி லமைத்தற்கும் இளமையே சாலச் சிறந்த தென்ப. எற்றுக்கெனின் பலவிஷயக்களிற்

அருட்பிரகாசம்.

பற்றுள மனத்தராம் முதியோர் மனதினும், சிலவிஷயங்களில் மாத்திரம் பற்றுளராம் இளையோர் மனமே தாம் கற்ற கேட்ட அல்லது சிந்தித்த வொன்றை விரைந்து பற்றிக் கொள்ளுந் தகைத்தா மாகலின், இதனு லன்றே பெரியாரும் "இளமையிற்கல்" என்னும் இளமைக் கல்வி சிலை யி லெழுத்து என்றும் கூறுவா ராயினர். ஆகவே கற்றவொன்றைத் கருத்தி லமைத்துப் பின்னர்ப் பிறர்க்குச் சொல்லிவருவதால் அது முன்னிலும் பன்மடங்கு வலுவாக நம்மனத்தில் அழுந்தி விடுகின்றது. ஆகலின் மேற் போந்த நியாய வாயிலாக ஒழுகி வருவமேல் ஞாபக சக்தியை எளிதில் விருத்தி செய்து கொள்ளலாம்.

இவ்வாறன்றி, கங்கை யாடக் கௌரவ ரோடு சென்ற துரோணர் செப்பிய படியே ஆலிலை தொளைக்க வடகோண விடுத்து மந்திர மொ ழியை மறுகணம் மறந்து கற்றன வோம்பாக் கருத்தின ஞன வணங்கா முடிமிளிர் மன்னவன் போல மறப்பெனும் பகைவன் வாரிக்கொள்ளச் செய்வோ மாயின் "வருந்தித்-தான் கற்றன வோம்பாது" என்னும் தொடக்கப் பாவின் கருத்துப்படி கற்ற ஒருநூற் பொருளையுமாவது சிந்தனை செய்து காவாமல் மற்றைய பன்னூல்களையும் கற்க விரும்புபவர் இருப்புத் தொகையை எடுத்து வீசி யெறிந்து விட்டு அரித்தலேந்து ஆக் கந் தேடி யல்றற் படுபவரை யொப்ப ரென்பதற் கன்றே இலக்கா வோம்.

ஆகலான் விரும்பிய நன்னூ லொன்றையேனும் கசடறக் கற்று ஒம்பி அதன்படியே நடக்கக் கடவோமாக. சுபம்.

தமிழ் ஆயுள் வேதம்.

தில்லையாளி, வைத்தியபதி, ஸ்ரீமான் சி. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்

(மலர் 1. இதழ் 2. பக்கம் 27-ன் தொடர்ச்சி.)

அகத்தியர்பதி வெண்பா.

ஆதிசிவனுமையாட் கன்புடனே யன்றளைத்த
சோதிமதி வெண்பாவைச் சொல்லுதற்கு நீதியுள்ள
வாலச்சிறு பெண்ணும் மானுன்மணியை வாமம்வைத்த
காலையேறுஞ் சிவன்முன் காப்பு.

போகர் 7000-வது காண்டம்.

தானுனையேமுலகத்தும் சிவன்தான் சொன்ன, சாஸ்திரத்தின் கரு வெல்லாந் தரிக்கப்பண்ணி, கோனுனகுருநூலாம் யேழுகாண்டம் கொட்டி னேன் வாதமென்ற முறைகடன்னே, பானுனபாட்டரைத்தான் கருக்கன் கேட்டுபயின்றெடுத்த ஆயிசொன்ன பண்புகேட்டு, தேனுனகாலாங்கி யை யையுங்கேட்டு செப்பினேன் சத்தகாண்டம் நிரமாய்காணே.

அகஸ்தியர் 12-வது 1200.

நம்பானுமைக்குரைத்தி கந்திகொண்
டின்பநல்வாசட நூலியம்பவே
தம்பமாமுனிதான் செய்தசெந்தமிழ்
நம்பனெம்பொனிறைபதம் போற்றுவாம்.

கதம்பம்.

அகல் 4 காவிடம் 1200.
கோழிந்த மழுவாளி எனக்கு சொன்னர்
குருபரனர் பதம்போற்றிக் கூறு வேனே.
சட்டமுனி 100.
வேளப்பா எரித்தசிவன் சொன்ன மார்க்கம்
வெவ்வாருஞ் சித்தர் சொன்னர் வித்தைபாரே.

மேற்சொன்ன பாடல்களால் வைத்தியமுறை முழுவதுமே முதல், முதல், உலகத்துக்கு வெளிப்பட்டது. முழுமுதற் கடவுளாகிய நஞ்சிவ பெருமானுலேயே யென்பது வெள்ளிடைமலையாய் விளங்குகின்றது. இதனால் இச்சித்தவைத்தியமே ஆதிவைத்தியமென்று ஸ்பஷ்டமாய் தெரிகிறது.

கதம்பம்.

உத்தரஞான சித்திபுரத்து சிற்சபை அமைப்பு

(மலர் 1. இதழ் 2. பக்கம் 60-ன் தொடர்ச்சி.)

ஏகநட்சத்திரத்தேகம்.

ஆயாகியில் வந்தநட்சத்திரமும் கர்த்தாவின் ஜென்ம நட்சத்திரமும் ஏகநட்சத்திரங்களாக வருவதில் பூசம், மூலம், மகம், ஆயில்யம், அவிட்டம், திருவாதிரை, பூராடம், அநுஷம், இத்தனட்டு நக்ஷத்திரங்களையும் வர்ஜ்ஜிக்க வேண்டும்.

கர்த்தாவுக்கு ஆகாத நட்சத்திரங்கள்.

ஜன்மநட்சத்திரமுதல் ஆயாகியில் வந்தநட்சத்திரம்வரை எண்ணி னால் 3-5-7-12-14-19-22-25-27 இத்தனாட்களைத்தவிர மற்றையநாட்களைச் சுபங்களாகக் கொள்ளவேண்டாம்.

கர்த்தாவுக்கு 6-ம் ராசியும் 8-ம் ராசியும் ஆகாதனவே.

கர்த்தாவின் ஜன்மநட்சத்திர ராசிமுதல் எண்ணி ஆயாகியில் வந்த இராசிலக்கினமாவது ஆயாகநட்சத்திர இராசியாவது 6-ம் 8-ம் ராசிகளாக வரின் ஆகவலம் சேஷராசிகளைச் சுபங்களாகவே கொள்ளவேண்டும்.

ஆயாகியாகிய சரீரத்திற்கு நடசத்திரமேதேவன்.

ஆயாகியே சரீரமென்னும் தேகமாகயிருக்கிறது. இத்தேகத்துக்கு கர்த்தாவின்நட்சத்திரம் இராஜாநட்சத்திரம் பந்தனநட்சத்திரம் வாஸ்துநட் சத்திரம் இவைகளே ஜீவனுக இருக்கின்றன.

ஆயாகியாம் புருஷனுக்கு 15-பொருத்தங்களும் காசாரணுகினான தேகமாகும் அத்தேகத்திற்குச் ஆத்திரம் பிராணனுகவும் இருக்கின்றதென் பது.

ஆயமும் பூதமும் தேகம். வியம் சுவாசம் யோனி பாகு நட்சத்திரம் சிரசு. வாரமும் பக்கமும் இரண்டுகைகள். அம்சமும் வம்சமும் இரண்டுகால் கள். இராசியாகிறலக்கினம் வயது நேத்திரம் காரணம் யோகம் இவைகுணங் களாம். இத்தப்படியான தேகத்தக்குச் சூத்திரம் பிராணன் இதில் கர்த்தா வின் நட்சத்திரம் ஜீவனுகவும் கற்பிக்கப்படுகின்றதுகாண்க.

அருட்பிரகாசம்.

இதன்விஷயத்தைத் தந்த இன்னமுமக்கோல் எனல்.

எழுமுவாகனம் சயனம் இவைகளைக் கிஷ்கு அஸ்தத்தினுலும் பூந்தோட்டம் முதலானவனத்தினுலும் பிரஜாபத்தியமென்ற முழக்கோலினுலும் கிலமானிகளை தந்தர்முஷ்டியென்கிற முழத்தினுலும் வேலிவழி முதலான வைகளையும் தனுர்ரோகமென்கிற முழத்தினுலும் அளக்கவேண்டும். சகலவிதமான வாஸ்துக்களையும கிஷ்குஎன்ற அஸ்தத்தினுலும் கொள்ளவேண்டும் என்பர் பெரியார்.

யவைகணக்கின் அங்குலபேதம்.

8-யவம்கொண்டது ஒருமானுங்குலம். 7-யவம்கொண்டது மத்திய மாங்குலி. 6-யவம்கொண்டது இளையாங்குலி அல்லது கன்னியசாங்குலி இதனையே அதமாங்குலிஎன்றும் அழைப்பர். தேவவிம்பஅளவுகளை கன்னியசாங்குலி என சிற்பநூல் சகஜமாகக் கூறுகின்றதாகலின் அதமம் என்று கூறலாகாது.

உத்தரஞான சிதம்பரம் ஆனிமாதப்பூசவிழா,

சென்ற ஆனித்திங்கள் கல-ம் நாள் (1-7-27) பூசமீன்தினத்தன்று சத்தியஞானசபையில் அருட்பெருஞ்ஜோதி தரிசனமும், சத்தியதருமச்சாலை ஞானசிம்மாதனப் பெருமானுர்க் கலங்காரதீபதூபநைவேத்திய ஆராதனை வழிபாடுகளும், திருவருட்பா பாராயணமும் மிகவும் விமரிசையாகக் காலந்தோறுந்தவறுமல் நடந்தேறின. ஸ்ரீலஸ்ரீ அற்புதானந்தசுவாமிகளும் விஜயஞ் செய்திருந்தார்கள். ஜீவகாருண்ணிய ஒழுக்கத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்யப்பட்டது. இவ்வாறே எல்லாம்வல்ல ஆண்டவன் திருவருளால் எஞ்ஞானறும் நடைபெறுமாறு பிரார்த்திக்கின்றேரும். இவ்விழாவைக் கூடலூர் திருவாளர் சீ. மல்லியஞ் செட்டியாரவர்கள் நடத்திவைத்தார்கள்.

வடலூர், சத்தியதருமச்சாலை. சுப்பராயசுவாமி.

மாயவரம்கிளைச் சன்மார்க்கசங்கத்திரண்டாவது ஆண்டுவிழா.

உத்தரஞான சிதம்பரம் வடலூர்த்த சமரசசுத்த சன்மார்க்க சங்க கிளையத்தின்கிளையாகச் சென்றஆண்டு ஆடித்திங்கள் 20-ம்நாள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டது. இதன் தலைவர் G. அண்ணுமலைப்பிள்ளை அவர்கள் இவ்வாண்டு ஆடித்திங்கள் 20-ம் நாள் 2-வது ஆண்டுவிழா வாதலின் அன்று ஸ்ரீமத் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம், இராமலிங்கசுவாமிகளின் திருவுருவப்படத்திற்கு அலங்காரதூபதீபஆராதனைகளும்திருவுலாக்காக்ஷியும் திருவருட்பா பஜனைகளும அன்னவினியோகங்களும் நடைபெறும். அக்கைங்கரியங்களுக்காக பொருளுதவி செய்ய விரும்பு முத்தமசிலர்கள் மாயவரம் சன்மார்க்க சங்கம காரியதரிசியிடத்தில் பணத்தைக்கொடுத்து ரசீதுபெற்றக்கொள்ளுவதோடுங்கூட அன்பர்களனைவரும் விஜயஞ் செய்து ஆண்டுவிழாவைச் சிறப்பித்து ஸ்ரீமத் வள்ளலார் திருவருளுக்கு உரிமையுடையோராகுக. வெனக் காரியதரிசி தெரிவித்துக்கொள்ளுகிறார். இவ்வணம் நமது சங்கத்தின்சார்பாக அனேகவிடங்களில் கிளைச்சங்கங்கள் நடைபெறுகின்றன. அதனதன் உண்மைநோக்கமெல்லா மொன்றேயாம். ஆயினும், பலதளிபெருவெள்ளம் என்னும் ஆன்றோர் சொல்லுக்கிணங்க நமதருமைச்சகோதரர்கள் யாவரும் நமதுபத்திரிகையை ஆதரித்து அதன் வாயிலாக தாம்பெற்றபேறு உலகம்பெறுதல் வேண்டுமென நமக்குவழிகாட்டியாகிய ஸ்ரீமத் வள்ளலாரின் திருவுள்ளக்கருத்திற்கிசைய நடப்பார்களாக.

மதிப்புரை

செல்வியிலிருந்து ஓர் அனுபவத்தால் கிடைக்கப்பெற்றோம். புதை பெழுதியவர் ஸ்ரீமான் சாம்பசிவமுதலியார் அவர்கள், இவர் ஸ்ரீமத் வள்ளற் பெருமானிடத்தில் வைத்த அன்பின் பெருக்கால் வெளிப்போந்த புத்தகத்தில் அருமையை யாவரும் பாராட்டற்குரியது. இதன் அடுத்த சஞ்சிகைமுதல் பிரகாஞ் செய்யும்படிக்கும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அன்பர்கள் கண்டுவக்கலாம்.

ப—ர்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிக்கை.

மாதந்தோறும் நாம் அனுப்பிவரும் பத்திரிகை சிலருக்கு சேராமலும் சிலருக்கு தபாபிசார் மூலமாகவும் கிடைக்கும் பத்திரிகை கிடைத்தவுடன் சந்தாதாரர்கள் தமது சேரவேண்டிலாசுத்தை எழுதி அனுப்பவேண்டியது. அத்துடன் தமது நண்பர்களையும் தூண்டி இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாகச் செய்விப்பதும் ஓர் பேருபகாரமாகும். பத்திரிகை வேண்டாத அபிபர்கள் நமக்கு வீண்செலவிற்கும் இடமில்லாமல் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்துவிட்டால் அதுவே ஓர் பெருந்தகைம்மாருகும். பத்திரிகை மாதந்தோறும் கிடைக்காதிருந்தால் உடனே பத்திரிகாதிபருக்கு அறிவிக்க வேண்டியது. சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோரும்படி நண்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

வடலூர், தி, கோ. வரதராஜர், பத்திராதிபர்,
திருவாடுதுறை மாயவரம் தாலுகா.

வருட சந்தா:— இந்தியா, பர்மா, சிலோன்,
முதலிய விடங்களுக்கு ரூ 2—0—0
வெளிநாடுகளுக்கு ரூ 3—8—0

விளம்பரம்.

இவ்விளம்பரத்தைப் படிக்கும் ஒவ்வொருவர்களும் இதைத் தங்களாலியன்றவரையில் பரவச்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது அச்சியந்திரசாலையில் சகலவிதமான புதிய எழுத்துக்களும், நல்லவேலைகளும், குறைந்த சார்ஜுடன் சகலவிதமான சௌகரியங்களோடு குறிப்பிட்ட காலத்தில் தவக்கமின்றி தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஆர்டர் அனுப்பப்பட்டவர்கள் அட்வான்ஸ் தொகையோடு தங்களுடைய முழுபெயர் விலாசத்தையும் தெளிவாய்எழுதித் தெரிவிக்கவேண்டியது.

இரத்தின விலாசம் பிரஸ்,
பிறையாறு.
கான்சாம்பாடி.